

புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2039 | ஜூன் 5, 2008 | புரட்சி 7 | முழக்கம் 23 | விலை : ரூ.2.50

## பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சியால் புதைந்துபோன பெரியாரின் ‘குடிஅரசு’ பேச்சு – எழுத்து வெளிவருகிறது!

# செப்.17 இல் - 27 தொகுதிகள்

## தமிழர்களே, ஆதரவுக்கரம் நீட்டுவீர்!

ஆய்வாளர்கள், தமிழின உணர்வாளர்களின் நீண்டகால விருப்பம் செயல்வடிவம் பெறுகிறது.

பெரியாரின் எழுத்துகளையும், பேச்சுகளையும் முழுமையாகத் திரட்டி சிதைக்காமல் தமிழ் கூறும் நல்லுலகத்தின் முன் பெரியார் திராவிடர் கழகம் பெருமையுடன் ஒப்பளிக்கிறது!



தமிழ்நாட்டின் வரலாற்றோடு பிணைந்து நிற்கும் பெரியாரின் ‘எழுத்தும் பேச்சும்’ கால வரிசைப்படி தொகுப்புகளாக, உங்கள் கரங்களில் தவழ இருக்கிறது.

தமிழகத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திய பெரியாரின் புரட்சிகர பச்சை அட்டை ‘குடிஅரசு’ ஏட்டில், புதைந்து கிடந்த பெரியார் சிந்தனைகளை தேடிப் பிடித்து,

1925 முதல் 1938 முடிய சுயமரியாதை இயக்கக் காலம் முழுவதும் தொகுக்கப்பட்டு 27 தொகுதி களாக, வெளிவர இருக்கின்றன.

ஒவ்வொரு தொகுதியும் 400 பக்கங்களுக்கு மேல்!

ரூ.5400 விலையுள்ள இத் தொகுதிகள் முன் பதிவு திட்டத்தின் கீழ் ரூ.3500-க்கே உங்களுக்கு கிடைக்கும்.

ரூ.3500 முன் பணம் அனுப்பி, முன் பதிவு செய்து கொள்ள வேண்டிய கடைசி தேதி, ஆகஸ்ட் 31.

வரைவோலையாகவோ (டிராப்ட்), பணவிடை வழியாகவோ (மணியார்டர்) மட்டும் அனுப்ப வேண்டும். காசோலைகள் (செக்) அனுப்ப வேண்டாம்.

பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஆம் தேதி - 27 தொகுதிகளும் வெளி வருகின்றன.

ஒவ்வொரு தமிழர் இல்லத்திலும் இடம் பெற வேண்டிய அரிய தொகுப்பு!

இந்தத் தொகுதிகளை நீங்கள் விரும்பும் நூலகத்துக்கும், பள்ளி, கல்லூரிகளுக்கும், ஆய்வு மய்யங்களுக்கும் நினைவுப் பரிசுகளாக நீங்கள் வழங்கி, என்றென்றும் நிலைக்கும் புகழுக்குரிய கடமையை ஆற்றலாம்.

ஏற்கனவே கழகத்தால் வெளியிடப்பட்ட மூன்று தொகுதிகளும், பல புதிய சேர்க்கை களோடு, கூடுதல் பக்கங்களில் இப்போது, இத் தொகுதிகளோடு இணைத்து, மீண்டும் வெளியிடப்படுகிறது.

தமிழின உணர்வாளர்களே! பெரியாரிய லாளர்களே! சமூக மாற்றத்துக்கு உழைக்கும் தோழர்களே!

முன்பணம் செலுத்தி, உங்கள் தொகுதிளை உறுதி செய்து கொள்ளுங்கள்!

**— பெரியார் திராவிடர் கழகம்**

(அனுப்ப வேண்டிய முகவரி - தொடர்பான விவரங்கள், அடுத்த இதழில்)

## குடந்தை விழாவில் கழகத்துக்கு ஒரு லட்சம் நன்கொடை

குடந்தையில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய நடிகவேள் எம்.ஆர். ராதா நூற்றாண்டு விழா அடுக்கடுக்கான நிகழ்ச்சிகளோடு மாநாடு போல் நடந்தது.

குடந்தை மகாமகக் குளம் மேல்கரையில் 30.5.2008 அன்று மாலை 6 மணியளவில் நிகழ்ச்சிகள் தொடங்கின. முதலில், நிகழ்ச்சிக்கு முன்னின்று ஏற்பாடுகளை செய்த சிற்பி இராசன், மந்திரமல்ல தந்திரமே நிகழ்ச்சியை நடத்தினார். தஞ்சை மாவட்ட பெரியார் திராவிடர் கழக அமைப்பாளர் சோலை மாரியப்பன் தலைமையில், மு.இளங்கோவன் முன்னிலையில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சா.வெங்கடேசன் வரவேற்புரையோடு, நடிகவேள் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. முனைவர் உ. பிரபாகரன் எழுதிய “பெரியார் ஈ.வெ.ரா.வின் கல்வியியல் சிந்தனைகள்” நூல், விழா மேடையில் வெளியிடப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட, தமிழ்ப் பல்கலைக்கழக பேராசிரியர் கார்த்திகேயன் நூலைப் பெற்றுக் கொண்டார். பேராசிரியர் இளங்கோ, நூலின் உள்ளடக்கம் குறித்தும், பக்திப் பாடல்களில் உள்ள ஆபாசங்களை விளக்கியும் உரையாற்றினார். பேராசிரியர் கார்த்திகேயன், தமிழ்நாட்டிலுள்ள பாடத் திட்டங்களில், பெரியாரியல் சிந்தனைகள், இடம் பெறாதிருப்பதை சுட்டிக்காட்டினார். கேரளாவில், சமூக - அறிவியல் பார்வையில், ஆண் - பெண் பாகுபாடு, சாதி ஏற்றத்தாழ்வு, தண்ணீருக்குள்ள நெருக்கடி, சுற்றுச்சூழல் மாசுபடுதல் போன்ற தலைப்புகளில் பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட் டுள்ளதை சுட்டிக்காட்டினார். தொடர்ந்து தமிழ்ப் பல்கலைக் கழக பேராசிரியர் முனைவர் ப. அருளி

4 ஆம் பக்கம்

தலையங்கம்

# மகர விளக்கு மோசடி

மக்களிடமிருந்து பணத்தை தந்திரமாகப் பறிப்பதற்கான வழிகளை சாணக்கியன் 'அர்த்த சாஸ்திர'த்தில் எழுதி வைத்தான். அந்த சாஸ்திரங்கள் – சாணக்கியன் காலத்தோடு மறைந்து விடவில்லை; இப்போதும் தொடருகிறது. அண்மைக்காலமாக 'வீரியமிக்க' பகவானாக – பக்தர்கள் வட்டாரத்தில் உலா வந்து கொண்டிருப்பவர் சபரிமலை அய்யப்பன். அந்த சபரிமலையில் – பொங்கலையொட்டி அய்யப்பன் ஜோதியாக வெளிவருவதாகக் கூறி, 'மகரஜோதி' ஒன்று, மலைகளிலிருந்து ஒளிரும். இந்த 'மகரஜோதியை' தரிசிக்க – பல லட்சம் மக்கள் திரளுவார்கள். உண்மையில் இது திட்டமிட்டு நடைபெறும் ஒரு 'மோசடி' என்ற உண்மை பல ஆண்டுகளுக்கு முன்பே அம்பலமானது. இப்போது மீண்டும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியின் அறநிலையத் துறை அமைச்சராக இருக்கும் ஜி. சுதாகரன் மகரவிளக்கிற்கும், அய்யப்பன் சக்திக்கும் தொடர்பில்லை, "இது மனிதர்களால் ஏற்றப்படும் விளக்கு என்பது அரசுக்கு தெரியும்" என்று கூறியுள்ளார். ஆனாலும், இதை அரசு தடுத்து நிறுத்தாது என்றும் கூறியுள்ளார். "நம்பிக்கையில் உள்ளவர்களின் நம்பிக்கையில் அரசு கை வைக்காது" என்கிறார். சபரிமலை குருக்களான கண்டரேறு கேஸ்வரகு என்பவரும், அமைச்சரின் கருத்தை வழிமொழிந்துள்ளார். ஏற்கனவே கேரள முதலமைச்சராக இருந்த ஈ.கே.நயினாரும் இதை ஒப்புக் கொண்டுள்ளார். இந்த 'மகர விளக்கை' மலைகளுக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டு, பக்தர்களை ஏமாற்றும் "மந்திரமா, தந்திரமா?" நிகழ்ச்சியை, இத்தனை ஆண்டுகாலம் அரங்கேற்றி வருவது கேரள மாநில இந்து அறநிலையத் துறையாகும்.

மக்களிடம் விஞ்ஞான மனப்பான்மையை வளர்த்தெடுக்க வேண்டும் என்று அரசியல் சட்டம் வலியுறுத்தினாலும், ஆட்சியில் இருப்பவர்கள் அவர்கள் மார்க்சிஸ்ட் கட்சியாகவே இருந்தாலும், பக்தியின் பேரால் நடக்கும் மோசடிக்கு உடந்தையாகவே இருக்கிறார்கள். 'நம்பிக்கையில் கை வைக்காதே' என்ற முழக்கத்துடன் தான் பார்ப்பன இந்துத்துவா சக்திகள் சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்க்கின்றன. கேரள மார்க்சிஸ்ட் ஆட்சியின் கருத்தை ஏற்க வேண்டுமானால், சேது சமுத்திரத் திட்டத்தையும் கைகழுவி விட வேண்டியதுதான்.

'அய்யப்பனிடம்' அன்றாடம் பூசை நடத்தும் 'தாந்திரிகள்' எனும் பார்ப்பன அர்ச்சகர்கள், பெண்களிடம் நடத்திய "திருவிளையாடல்கள்" கடந்த சில ஆண்டுகளுக்கு முன் வெளி வந்தன. அய்யப்பனிடம் சக்தி ஏதுமில்லை என்பது பற்றி, 'இவாள்'களுக்கு நன்றாகவே தெரியும்.

அய்யப்பன் கோயிலே தீ விபத்துக்கு உள்ளானது. திருவண்ணாமலை கோயில் கோபுரம் 'மின்னல்' சக்திக்கு முன் ஈடு கொடுக்க முடியாமல் இடிந்து விழுகிறது. மயிலாப்பூர் கபாலீசுவரன் கோயிலில் உண்டியலையே – கபாலியால் காப்பாற்ற முடியவில்லை. ஆனாலும், 'சக்தி', 'நம்பிக்கை' என்று ஒரு கூட்டம், தொண்டை கிழியக் கத்திக் கொண்டு திரிவதோடு, உச்சநீதி மன்றத்துக்கும் போய் "நம்பிக்கையைக்" காப்பாற்ற மனுப் போடுகிறது.

இப்படி ஏராளமான மோசடிகள் அம்பலமாகிக் கொண்டிருந்தாலும்கூட, திடீரென்று, "அம்மன் சிலை கண்களில் ரத்தம் வடிகிறது", "வேப்ப மரத்தில் பால் ஒழுகுகிறது" என்று செய்திகள் வருவதும், கடவுள் சக்தி என்று மக்கள் நம்பிக் கொண்டு ஓடுவதும் தொடர்கிறது. தொடர்ச்சியான பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் தேவையையே இவை உணர்த்துகின்றன.

'இந்துத்துவாவை வேரறுப்போம்; மதவாத சக்திகளை வீழ்த்துவோம்' என்று முழங்கிக் கொண்டு, அதன் ஆணி வேராக இருக்கும் நம்பிக்கைகளில் மட்டும் கை வைக்க மாட்டோம் என்று சொன்னால் இந்துத்துவா சக்திகளை எப்படி தடுக்க முடியும்?

பா.ஜ.க. கட்சி சொல்வதையே மார்க்சிஸ்ட் கட்சிகளும் கூறலாமா என்பதே நமது கேள்வி. கேரள நாத்திகர்கள் அமைப்பு, இந்த உண்மைகளை வெளிக் கொணர போராடி வெற்றி பெற்றுள்ளது. மகர விளக்கு மோசடியை கேரள அரசு தடை செய்ய வேண்டும். அதற்கு தயங்கினால் இந்த மோசடிகளுக்கு எதிரான பிரச்சாரத்தையாவது குறைந்தபட்சம் ஆட்சியாளர்கள் செய்ய முன் வரவேண்டும்.

# புதுவையில் கழகம் நடத்திய இருநாள் பயிற்சி முகாம்

புதுவையில் பெரியார் திராவிடர் கழக பயிற்சி முகாம் - மே 31, ஜூன் 1 தேதிகளில் சிறப்புடன் நடைபெற்றது. புதுவை அரியாங்குப்பம் அருகே உள்ள - ஒரு மாந்தோப்பில் இயற்கைச் சூழலில் நடந்த இந்த பயிற்சி வகுப்பில், 20 பெண்கள் உட்பட, 125 தோழர்கள் பங்கேற்றனர்.

மே 31 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் சமூகப் பாகுபாடுகள் எனும் தலைப்பில் தோழர் தேவநேயன் பயிற்சியாளர்களையும் பங்கேற்க வைத்து - பால், சாதி அடிப்படையிலான பாகுபாடுகளையும், அதன் வழியாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதையும் விளக்கினார். தொடர்ந்து - பயிற்சியாளர்கள், 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, சமூகத்தில், அடிமைத்தனத்தையும், பாகுபாட்டையும் நிலைநிறுத்தும் பல்வேறு கற்பிதங்கள், பழமொழிகள் பற்றி, குழுவினர் விவாதித்து, அதைத் தொகுத்தனர். ஒவ்வொரு குழுவினரும் தொகுத்த கற்பிதங்கள் தொகுக்கப்பட்டு, அதில் அடங்கியுள்ள பாகுபாடுகள், விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டது. மதியம் 2.30 மணியளவில் அனைவருக்கும் புலால் உணவு வழங்கப்பட்டது. மீண்டும் 3 மணியளவில் பயிற்சிகள் தொடர்ந்தன. வழக்கறிஞர் சுந்தர்ராசன், பயிற்சியாளர்களின் பங்கேற்போடு, உலக மயம் சுற்றுச் சூழல் பற்றிய விரிவான விளக்கங்களைத் தந்தார். இந்தியாவின் சட்டம், ராணுவம், விவசாயம், கல்வி, மருத்துவத் துறைகளில் 'உலகமயமாதல்' என்ற சுரண்டும் கொள்கை உருவாக்கியுள்ள பாதிப்புகளை எடுத்துக்காட்டினார். 1947 இல் உருவான காட் ஒப்பந்தத்திலிருந்து தொடங்கி, 1993 இல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே முழு விவரம் தெரிவிக்கப்படாமல் அன்றைய மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது வரை விளக்கினார். அணுசக்தியினால் உருவாகும் ஆபத்துகளையும், அணுமின் நிலையங்கள் செயல்படும் பகுதியில், அணுக்கதிர் வீச்சால், மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளையும் வெளிநாட்டு வழக்கறிஞர்கள் - இந்தியாவில் தொழில் நடத்த அனுமதிக்கப்பட்டதையும் சுட்டிக் காட்டினார். இந்தியாவில் பொருள்களை உற்பத்தி செய்யும் முறைக்கு மட்டுமே காப்புரிமை வழங்கும் சட்டம், அமுலில் இருந்ததால், இந்தியாவில், மருந்து பொருள்கள் குறைந்த விலையில் கிடைத்து வந்தன. சர்வதேச நிர்ப்பந்தத்துக்கு அடிப்பணிந்த இந்திய ஆட்சி, 'உற்பத்தி செய்யும் முறைகளுக்கு' இருந்த காப்புரிமையை உற்பத்தியான "பொருள்"களுக்கான காப்புரிமையாக மாற்றி, சட்டத்தைத் திருத்தியதால், ஏகாதிபத்திய நாடுகள் - பொருள்களுக்கு காப்புரிமை கோரி, இந்தியாவின், உற்பத்தியில் தலையிட்டு, விலைகளை ஏறச் செய்துவிட்டன. இந்த திருத்தத்துக்கு குடியரசுத் தலைவர் கையெழுத்திட்ட நாள் - சுனாமி தாக்குதல் நடந்த 2004 டிசம்பர் 26 என்ற அதிர்ச்சியான தகவலையும் கூறினார். கொக்கோ கோலா போன்ற பன்னாட்டு குளிர்பான நிறுவனங்கள்; பன்னாட்டு மருந்து உற்பத்தி நிறுவனங்கள்; உலகமயமாக்கத்தைப் பயன் படுத்தி நடத்தி வரும் சுரண்டலையும், பன்னாட்டு விதை நிறுவனங்கள் இயற்கை வளத்தை அழித்து வருவதையும், விரிவாக எடுத்துரைத்தார். பயிற்சி யாளர்கள் இது தொடர்பாக பல கேள்விகளை எழுப்பினர். அது தொடர்பான விவாதங்கள் நடந்தன.

தொடர்ந்து தேவநேயன் - ஊடகங்கள் பற்றியும், ஊடகங்களில் வெளிவரும் விளம்பரங்கள் பற்றியும், குழந்தைகள் உரிமைகளில், இவைகள் நிகழ்த்தும் கொடூரமான குறுக்கீடுகள் பற்றியும், பல்வேறு உதாரணங்களை எடுத்துக்காட்டியும் பேசினார். முதல் நாள் நிகழ்ச்சிகள் இரவு 7.30 மணியளவில் நிறைவடைந்தன.

## இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் ஜூன் 1 ஆம் தேதி காலை 10 மணியளவில் பயிற்சி தொடங்கியது. பங்கேற்பாளர்கள், முதல் நாள் பயிற்சியில் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்தனர். பங்கேற்பாளர்கள் எழுப்பிய அய்யங்களுக்கு விளக்கம் என்ற வடிவத்தில் விவாதம் தொடங்கியது. பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், உலகமயமாக்கலினால் பார்ப்பன ஆதிக்கம் மேலும் உறுதியாகியுள்ள நிலைமையையும், தனியார் துறைகள் வளர்ச்சியினால், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் வேலை இழந்து நிற்பதையும், தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்கும் பிரச்சினையை மத்திய அரசு கிடப்பில் போட்டுள்ளதையும் எடுத்துக் காட்டி, தற்போது கணினி துறையிலும், 'பி.பி.ஓ.', கால்சென்டர்'களிலும் 70 சதவீதத்துக்கு மேல் பார்ப்பனர்களே ஆதிக்கம் செலுத்துவதை பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளில் அடங்கியுள்ள புள்ளி விவரங்களை எடுத்துக்காட்டி விளக்கினார். உலகமயமாக்கல் என்ற சுரண்டல் கொள்கையை எதிர்க்கும்போது, இந்துத்துவா சக்திகளிலிருந்து மாறுபட்டு நிற்க வேண்டிய புள்ளிகளை பெரியாரில் கண்ணோட்டத்தில் எடுத்துக் கூறினார். தொடர்ந்து - கழகத் தலைவர் கொளத்தூர் மணி இடஒதுக்கீட்டின் வரலாறு, நீதிமன்றம் போட்ட தடைகள், அதற்கு நீதிமன்றம் கூறிய சமூக நீதிக்கு எதிரான காரணங்களையும், 'கிரிமிலேயர்' முறையினால் வரும் பாதிப்புகளையும் விளக்கிப் பேசினார்.

1.30 மணியளவில் அனைவருக்கும் புலால் உணவு வழங்கப்பட்டது. மீண்டும் 2.30 மணியளவில் பயிற்சி தொடங்கியபோது பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகள், அணுகுமுறைகள், கழகத் தோழர்கள் இயக்கத்தை மேலும் வளர்த்தெடுக்க மேற்கொள்ள வேண்டிய பல்வேறு அணுகு முறைகள், பெரியார் இயக்கத்தின்மீது கூறப்படும் விமர்சனங்களுக்கான விளக்கங்களைத் தந்து உரையாற்றினார்.

தொடர்ந்து பயிற்சியாளர்கள், இரண்டு நாள் பயிற்சியில் தாங்கள் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதோடு, கழகத்துக்கும், கொள்கைக்கும் தங்களின் பங்களிப்பு, எத்தகையதாக இருக்கும் என்ற உறுதியை வழங்கினர். இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, குடும்ப உறவுகளுக்கு மாற்றாக, இயக்க உறவுகள் வலிமை பெறும் வகையில், கழகத்தின் செயல்பாடுகள் முன்னேற வேண்டும் என்பது குறித்தும், 'தமிழ்த் திருமண முறை' என்ற சைவர்கள் திணித்த திருமண முறையின் நோக்கமே சுயமரியாதை திருமணத்துக்கு எதிரானதுதான் என்பதை விளக்கியும், நிறைவுரையாற்றி, பயிற்சி முகாமை முடித்து வைத்தார். இரவு 7 மணியளவில் பயிற்சி முகாம் நிறைவடைந்தது.

திறந்த விவாதங்களோடு புதிய பயிற்சி முறைகளைப் பின்பற்றி நடந்த இந்த பயிற்சி முகாம், பெரியார் திராவிடர் கழகத்தின் பெரியாரியல் செயல்பாடுகளை, மேலும் விரிவான தளத்துக்கு நகர்த்தி, பெரியாரியலை வளர்த்தெடுப்பதாக அமைந்திருந்தது. பயிற்சியாளர்களுக்கு ஏராளமான தகவல்கள், விளக்கங்களைத் தருவதாகவும் அமைந்திருந்தது. புதுவை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் தலைமையில் தோழர்கள் முகாமுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

**– நமது செய்தியாளர்**

## சென்னையில் கழக சுவரெழுத்து



# மத்திய அமைச்சர் ஆ. இராசா ஆய்வுரை (7)

# பெரியாரும் அம்பேத்கரும் இருள் நீக்கும் விளக்குகள்!

*22.2.2008 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பெரியார் உயராய்வு மையமும், மகளிரியல் துறையும் இணைந்து நடத்திய 'பெரியார் அம்பேத்கர்: இன்றைய பொருத்தப்பாடு' என்ற தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவில் பங்கேற்று மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப துறை அமைச்சர் ஆ. இராசா ஆற்றிய உரையின் தொடர்ச்சி:*

அம்பேத்கர் 10.10.1951 இல் ரிசைன் பண்றார். ஒரு அமைச்சர் ரிசைன் பண்ணிட்டு வெளியே வருகிற பொழுது நான் ஏன் ரிசைன் பண்றேன்கறதுக்கு காரணங் கொடுக்கணும். நான் ஒரு கேபினட் அமைச்சர். கேபினட் அமைச்சர் நான் நாளைக்கு ரிசைன் பண்ணினேன்னு வச்சுக்குங்க, I am entitled to file a paper, why I am to resigning நாட்டு மக்களுக்குத் தெரியணும் இல்லையா? அதுக்காக அரசியல் சட்டத்திலேயே ஒரு அமைப்பு இருக்கு. அப்படி அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்து கொண்டு வெளியேறி வருகிறபொழுது அவர் ஒரு ஆவணத்தை சமர்ப்பிக்க முயற்சி செய்கிறார். அதற்கு நேரு அரசாங்கத்தால் அனுமதி கொடுக்க முடியவில்லை. அவர் வெளியே வந்ததும் அந்த பேப்பரைக் கொடுத்து விடுகிறார். இதத்தான் நான் பார்லி மெண்டில் படிக்கிறேன்னு. அதில் அவர் சொல்கிறார்:

அவர் ஒரு மிகப் பெரிய பொருளாதாரவாதி. பெரிய பொருளாதாரவாதி Problem of rupee - ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்தை இன்றைக்கும் மன்மோகன்சிங் படித்துக் கொண் டிருப்பதாக நாடாளுமன்றத்தில் அவரே பதிவு செய்திருக்கிறார். The evaluation of the provincial finance in British India அப்படின்னு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரைக்கு மிகப் பெரிய பாராட்டுதல்கள் எல்லாம் கிடைச்சிருக்கு. ஆக, நாணயத்தின் மதிப்பு, உலகச் சந்தையின் மதிப்பு என்று இன்றைக்குப் பேசுகிற அந்த மதிப்பையெல்லாம் அவர் பேசியவர். தன்னை ஏன் அந்த Finance Committee நிதி சம்பந்தப்பட்ட குழுவில் போடவில்லை என்பதாக விலகலுக்கு ஒரு காரணத்தைச் சொல்லுகிறார்.

இரண்டாவது காரணம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு தரவேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதற்கு அரசியல் சட்டத்தினுடைய பிரிவுகளில் நான் உரிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறேன். அரசியல் சட்டத்தின் 340வது பிரிவு to investigate the backwardness of the community in each state ஏனென்றால் என்கிட்ட பட்டியல் கிடையாது. யார் பிற்படுத்தப்பட்டவன்? தமிழ்நாட்டில் வன்னியர் பிற்படுத்தப்பட்டவரா? முக்குலத்தோர் பிற்படுத்தப்பட்டவரா? நாடார் பிற்படுத்தப்பட்டவரா என்கின்ற பட்டியல் எனக்குத்தெரியாது. கேரளாவிலே யார் பிற்படுத்தப்பட்டவன்? மகாராஷ்டிரத்திலே, ஒரிசாவிலே யார் பிற்படுத்தப்பட்டவன் என்கின்ற பட்டியல் கிடையாது. ஆனால் அரசியல் சட்டத்தில் 40வது பிரிவில் நான் சொல்லியிருக்கிறேன். A commission should be appointed to investigate the backwardness of the community and to give representations ot all the corners என்று அவர் சொல்லியிருக்கின்றார். இப்படி ஒரு ஆணையம் அமைக்க வேண்டுமென்று அரசியல் சட்டத்தில் நான் எழுதிவிட்டேன். நேருவிடம் நான் பலமுறை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன். இந்த ஆணையத்தை முறையாக ஒழுங்குபடுத்தி ஓராண்டு, இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக சாதிப் பட்டியல் எல்லாம் எடுத்து அவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் இடஒதுக்கீடு தர வேண்டுமென்று நாடாளுமன்றத்திலும், நேருவிடத்திலும் பலமுறை கூறிவிட்டேன். ஆனால் அவர்கள் அதைச் செய்ய மறுக்கிறார்கள் என்று இரண்டாவது காரணம்.

மூன்றாவது காரணம். ரொம்ப முக்கியமான காரணம். Hindu Code Bill இன்றைக்கு நாம் சொல்லு கிறோம். உடனே இலேசா பிடிக்கலேன்னாக்கூட டைவர்ஸ்ங்கறான் இன்றைக்கு. பிடிக்கலேன்னா மணமுறிவு. புருசன் பொண்டாட்டிக்குள் தகராறு, மண முறிவு. இந்த மணமுறிவை ஒரு காலத்தில் முடியாது என்று சொன்னார்கள். பெண்களுக்குச் சொத்துரிமை தந்தவர் தலைவர் கலைஞர். ஆனால் இந்த சொத்துரிமையை 1950 களில் Hindu Code Bill-லில் கொண்டுட்டு வர்றார் அம்பேத்கர். ஒரு சாதியம் சார்ந்த இந்த இந்து மதத்தில் என்னென்ன முன்னேற்றங்களை, என்னென்ன மறுமலர்ச்சியை திருமணத்தில், சொத்தில் உள்வாங்கிக் கொள்கின்ற அல்லது அகமண முறையில் உள்வாங்கி ஒரு வாழ்வியல் ஆதாரங்களில் எப்படிப்பட்ட நடைமுறை யில் சிவில் சட்டம் இருக்க வேண்டுமென்று Hindu Code Bill சொல்கிறது. அந்த Hindu Code Bill பற்றி அவர் சொல்லுகிறபோது, ரொம்பத் தெளிவாகவே சொல்கிறார். இது வந்து ஒரு மிகப் பெரிய, இதுவரை யாரும் எடுத்திராத ஒரு மிகப் பெரிய முயற்சி. இந்த முயற்சியை நான் எடுக்க வேண்டுமென்று ஆசைப் பட்டு நேருவிடம் நான் கேட்டபோது, நேரு ஒப்புக் கொண்டார். ஆனால் என்ன காரணத்தினாலோ, தன்னை Agnostic என்று சொல்லிக் கொண்டே நேரு, தன்னை பகுத்தறிவு என்று சொல்லிக் கொண்ட நேரு, சாதி கிடையாது என்று சொல்லிக் கொண்ட நேரு, இந்து மதத்தில் நான் கை வைப்பதை, பெண்களுக்கு சொத்துரிமை கொடுப்பதை, பெண்களுக்கு மணமுறிவு வழங்குவதை, பெண்களுக்குத் திருமணத் தில் சில சலுகைகளை வழங்குவதை ஒப்புக் கொள்ள மறுக்கிறார். மூதாதையர் சொத்தில் பெண்களுக்கு உரிமை வேண்டும் என்று நான் குறிப்பிட்டு இருக்கிறேன். இந்த மாற்றங்களையெல்லாம் செய்வதற்கு நேருவும், மந்திரிசபையும் ஒப்புக் கொள்ளாத காரணத்தினால் நான் வெளியேறுகிறேன் என்று அவர் சொல்கிறார். என்ன காரணம்.

ஒன்று, பைனான்ஸ் கமிட்டியில் தன்னை ஏன் போடவில்லை? இரண்டு, பேக் வேர்ட் க்ளாஸ் கமிஷன் சொல்லி இத்தனை ஆண்டுகாலமாயிற்றே. அவர்களுக்கு ஏன் இன்னும் நீங்கள் இடஒதுக்கீடு வழங்குவதற்கு எந்தக் காரணமும் சொல்லவில்லை. அந்த ஆணையத்தை ஏன் அமைக்கவில்லை. Hindu Code Bill ஏன் தரவில்லை என்று தான் அவர் தன்னுடைய இராஜினாமாக் கடிதத்தைத் தருகிறார். ஆக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செய்ய வேண்டும். செய்யத் துணிந்தவர் அம்பேத்கர். அதற்கான என்ன அடிப்படை ஏற்பாடுகளையும் அரசியல் சட்டத்திலும், அவர் பின்னால் கொண்டு வந்த சட்ட மசோதாவிலும் கொண்டு வந்து சேர்த்தவர் அம்பேத்கர்.

இதை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பெரியார் காந்திக்கு எதிராக அம்பேத்கருக்கு எழுதிய தந்தியை புரிந்து கொள்ள வேண்டும். இந்த இரண்டு தலைவர்களும், இரண்டு தளத்தில் சிறு சிறு மாற்றங்களோடு இயங்கினாலும்கூட, அவர் களுடைய வாழ்க்கையெல்லாம், தன்னுடை யவாழ்நாளெல்லாம் இந்த மக்கள் கல்வியால், பொருளாதாரத்தால் பிற்படுத்தப்பட்ட இந்த மக்கள் வாழவேண்டுமென்பதற்காக அதற்கு எதிராக இருக்கிற கொள்கைகளையெல்லாம் தகர்த்து எறிந்தவர்கள். கடைசியாக ஒரு கேள்வி. இவர் இன்றைக்கும் தேவைப் படுகிறாரா? என்று கேட்கிறவர்கள் இருக்கிறார்கள்.



பெரியார் இவ்வளவெல்லாம் பேசினார் சரி. இதெல்லாம் இருக்குதான்னு கேக்குறார். 1973-ல் அவருடைய பிறந்த நாளில் பெரியார் சொன்னத கடைசியா நான் வாசிக் கணும்.

"50 வருட காலமாக சுயமரியாதை இயக்கம் சாதித்தது என்ன என்று பார்த்தால், சிறிது படிப்பு, சிறிது உத்யோகம் பெற நேர்ந்ததோடு அரசியலில் பிராமணர் களின் கொட்டத்தை நல்ல அளவு அடக்கிற்று என்பதல்லாமல், சமுதாயத் துறையில் இழிவும், பொருளாதார ஒடுக்கலும் நல்ல அளவுக்கு பலம் பெற்று விட்டது என்றுதான் நான் சொல்லுவேன்".

இது பெரியார் சாகிறவரைக்கும் சொன்னார். பெரியார் சாகிறபோதுகூட தான் வெற்றி பெற்று விட்டதாக எப்போதும் சொல்லிக் கொண்டவரல்ல. இன்றைக்கும் என்ன நடக்கிறது. நான் முன்பே குறிப்பிட்டதைப் போல சேதுத் திட்டம் இன்று நிறைவேறாததற்குக் காரணம் இந்த இந்துத்துவா என்கிற அமைப்பு, இந்துத்துவா என்கிற கொள்கை.

இன்னொன்று வரலாற்றைத் திரிப்பதற்குக் காரணமாக இருப்பது இந்துத்துவா. கடந்த பி.ஜே.பி. ஆட்சியில் ரோமிலா தாப்பரும், டி.டி.கோசாம்பியும், ஹபீப்பும் எழுதிய திராவிட இயக்க சமுதாயம் என்றால் என்ன? சிந்து சமவெளி நாகரீகம் என்றால் என்ன? என்பதை விளக்கினார்கள். சிந்து சமவெளி நாகரீகத்தில் காளை மாடு இருந்தது. சிவபெருமான் வழிபாடு இருந்தது. அங்கிருந்தவர்கள் உலகத்தின் மூத்த குடிகள். எகிப்திலே பிரமீடுகள் வருவதற்கு முன்னால், நைல் நதிக்கரையில் நாகரீகம் அரும்புவதற்கு முன்னால் சிந்து சமவெளி நாகரீகம், சைனாவினுடைய பெருஞ்சுவர் வருவதற்கு முன்னால் சிந்துசமவெளி நாரீகம் உயர்ந் திருந்தது. அதற்குச் சொந்தக்காரர்கள் தென்னிந்தியாவிலே இருக்கக் கூடிய திராவிடர்கள் என்கின்ற அந்த வரலாற்றைப் புரட்டி, இல்லை. அது காளை மாடு இல்லை, குதிரைதான். அது சிந்து சமவெளி அல்ல. இந்து சமவெளி. வெளியே இருந்து ஆரியர்கள் வரவில்லை. இங்கேதான் இருந்தார்கள் என்கின்ற வரலாற்றுப் புரட்டை இன்றைக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஜெய்பால் ரெட்டிதான் ஒரு முறை சொன்னார், பார்லிமெண்ட்ல, டெரரிஸ்ட்ட பத்தி பேசிக்கிட்டு இருந்தாங்க. அவர் சொன்னார், நேரடியா துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஒரு நாட்டிலுள்ள மனிதர்களைச் சுடுவது என்பது வேறு, அது டெரரிஸ்ட். ஆனால் முரளி மனோகர் ஜோஷி இருக்கிறாரே அவர் டெக்ஸ்ட் புக் டெரரிஸ்ட் என்று ஜெய்பால் ரெட்டி சொன்னார். பாடத் திட்டத்தில் ஒரு பயங்கரவாதி, பாட நூல் பயங்கரவாதி. வரலாற்றைத் திரித்துக் கூறுகிற இந்துத்துவா அமைப்புகள் இன்னமும் இருந்து கொண்டிருக்கிறது. சேது சமுத்திரத் திட்டத்தை முடக்கிப் போடுவதற்கு இன்னமும் இந்துத்துவா இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் பெரியாரும், அம்பேத்கரும் இரு விளக்குகளாக உள்ளனர். இந்த இருளை நீக்குவதற்கு இந்த விளக்குகளை இரண்டு கைகளிலும் ஏந்திப் போராடுவதற்கு முன்வருவோம். (நிறைவு)

---

## பெரியார் திராவிடர் கழக செயற்குழுக் கூட்டம்

பெரியார் திராவிடர் கழக செயற்குழுக் கூட்டம் **15.6.2008** காலை **10** மணியளவில் சென்னை அசோக் நகர் அம்பேத்கர் சாலையில் உள்ள கணேஷ் மகால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

செயற்குழு உறுப்பினர்கள் தவறாது பங்கேற்க வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

**தா.செ. மணி**

*தலைவர்*

பெரியார் திராவிடர் கழகம்

---



4 ஆம் பக்கத் தொடர்ச்சி

தொடர்ந்து சோழர் சிற்பி இராசனின் மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. அலகு குத்திய தோழர்களுக்கு குத்தூசி குருசாமி எழுதிய நூல்கள் வழங்கப்பட்டன. ஆர்.எஸ். பகுதி பெரியார் திராவிர் கழகத்தின் சார்பில் தோழர்கள் அ. சக்திவேல், எஸ்.பி. அரவிந்த், அருள்செல்வம், அ.நாகராசன், செல்வம், பிரபாகரன், சுரேசுகுமார், அ.நாகேந்திரன் ஆகியோர் இயக்க வளர்ச்சி நிதியாக ரூ.50,000 த்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினர். கழக தோழர் எஸ். எம்.டி. சுரேசுகுமார்-கோமதி ஆகியோர் மகளுக்கு அன்பு மலர் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெயர் சூட்டினார். நங்கவள்ளி அன்பு பேசியதைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். மேட்டூர் ஆர்.எஸ்.சில் 'புரபசனல் கூரியர்' நடத்திவரும் தோழர் கண்ணன் நாத்திகர் விழாவுக்கு நன்கொடையாக ரூ.5000-த்தை கழகத் தலைவரிடம் வழங்கினார். முன்னாள் மேலவைத் தலைவரும், பெரியாரியல் வாதியுமான புலவர் புலமைப்பித்தன் நிறைவாக சிறப்புரையாற்றினார். இறுதியில் தோழர் எஸ்.பி. அரவிந்த் நன்றி கூற விழா முடிவடைந்தது.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# குடந்தையில் கால் பதித்தது பெரியார் திராவிடர் கழகம்





முதல் பக்கத் தொடர்ச்சி

பெரியார் பற்றிய உணர்ச்சிப்பூர்வமான உரையை நிகழ்த்தினார். தொடர்ந்து சிற்பிராசன், மந்திரமா தந்திரமா நிகழ்ச்சிகளை நடத்தினார். தொடர்ந்து பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, நடிகதேவள் எம்.ஆர்.ராதாவின், பெரியார் கருத்துகளை எதிர்நீச்சல் போட்டு நாடகமாக்கிய வரலாறுகளையும், பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகளையும் விளக்கி உரையாற்றினார். இதைத் தொடர்ந்து 11 மணியளவில் முரசொலி முகிலன் குழுவினரின் ‘ஈரோட்டு பூகம்பம்’ கலை நிகழ்ச்சி சிறப்புடன் நடைபெற்றது. நள்ளிரவு 12.30 மணி வரை நிகழ்ச்சி தொடர்ந்தது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். மாநாடு போல் விழா நடந்தது குறிப்படத்தக்கது. விழாவுக்கு மேலும் சிறப்பூட்டும் வகையில் தஞ்சை, நாகை மாவட்ட பெரியார் திராவிடர் கழக சார்பில் கழக வளர்ச்சிக்கு ரூபாய் ஒரு லட்சம் நிதி வழங்கப்பட்டது. விழா மேடையில், சிற்பிராசன், நாகை மாவட்ட தலைவர் பரசுராமன், மாவட்ட செயலாளர் மகேஷ், தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சோலை மாரியப்பன் ஆகியோர், கழகத் தலைவரிடம், பலத்த கரவொலிக்கிடையே நிதி வழங்கினர்.

மேட்டூர் கழகத் தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்க தனி வேனில் வந்திருந்தனர். மயிலாடுதுறை கழகத் தோழர்கள், இரு நாட்களுக்கு முன்பே, குடந்தை வந்து விழா நிகழ்ச்சி ஏற்பாடுகளிலும், கடைவீதிகளில் நன்கொடை திரட்டும் பணியிலும் ஈடுபட்டிருந்தனர். பெரியார் இயக்கத்தின் மூத்த தொண்டர்கள் பலர் விழாவில் பார்வையாளராக பங்கேற்றனர். பெரியார் திராவிடர் கழகம் துடிப்போடு பெரியார் கொள்கையைப் பரப்புவதை - மூத்த தலைவர்கள் பலரும் நெகிழ்ச்சியோடு பாராட்டினர்.

**– நமது செய்தியாளர்**

# கழக வளர்ச்சிக்கு ரூ.50,000 நன்கொடை

## *தங்கமாபுரி பட்டினத்தில் கழகம் நடத்திய நாத்திகர் பேரணி*




மேட்டூர் ஆர்.எஸ். தங்கமாபுரிப் பட்டிணத்தில் மே 20 அன்று நாத்திகர் விழா எழுச்சியுடன் நடைபெற்றது. திரும்புமிடமெல்லாம் கழக கொடிகள் தோரணங்களாக விழாக் கோலமாக காட்சியளித்தன. பெரியார் தி.க.வினர் பக்தி இல்லாமல், விரதம் இல்லாமல் அலகு குத்துகிறார்களாம். அக்னி சட்டி எடுக்கிறார்களாம் என்ற வியப்போடு பொதுமக்கள் பேசினர். மாலை 5.30 மணிக்கு பெரியார் நகரிலிருந்து ஊர்வலம் தொடங்கியது. பெரியார் உடற்பயிற்சி மையம் நடத்தும் சிலம்பாட்டமும், மேச்சேரி தோழர்களின் ஒயிலாட்டமும் இடம் பெற்றிருந்தது. அதைத் தொடர்ந்து மகளிரணியினர் ‘அக்னி’ சட்டியை கடவுள் மறுப்பு முழக்கத்துடன் எடுத்து வந்தனர். பெரியார் பிஞ்சுகள், டி. முகிலன், சுகந்தன், பிரபாகரன், சக்திவேல் ஆகியோர் அலகு குத்தி வந்தனர். சக்திவேல் தனது தலையில் நெருப்பை மூட்டிக் காட்டினார். அதில் பால் காய்ச்சப்பட்டது. வேடிக்கைப் பார்த்த மக்களுக்கு பால் தரப்பட்டது. தோழர் செல்வம் முதுகிலே அலகு குத்தி, மாருதி ஆம்னி காரை இழுந்து வந்தார். அரவிந்த், சுரேசுகுமார் முதுகில் அலகு குத்தி காரை இழுத்து வந்தனர். டி. பிரபாகரன் காரின் மீது வைத்திருந்த ஆணி படுக்கையில் படுத்து வந்தார். எளம்பிள்ளை சந்திர சேகர், கோவை இராசமாணிக்கம் ஆகி யோர் முதுகில் அலகு குத்தி பறவைக் காவடியாக தொங்கிக் கொண்டு வந்தனர். கோவை தமிழ்ச்செல்வமும், தங்கராசும் வாயில் அலகு குத்தி வந்தனர். 2.5 கிலோ மீட்டர் தூரம் பேரணி வந்ததை மக்கள் திரண்டு பார்த்தனர். 7.30 மணிக்கு விழா மேடையை ஊர்வலம் வந்தடைந்தது. 8 மணி அளவில் நாத்திகர் விழா பொதுக் கூட்டம் தொடங்கியது.


கூட்டத்திற்கு எஸ்.எம்.டி. பிரபாகரன் தலைமையேற்க முருகேசன், அ. நாகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஈரோடு நண்பர் விக்கி சாகச நிகழ்ச்சிகளை நடத்தினர். தன்னுடைய உடல் பலத்தால் புதிதாக வாங்கிய 100 ஓடுகளை உடைத்து காட்டினார். தன்னுடைய கை பலத்தால் 50 கண்ணாடி பாட்டில்களை உடைத்துக்காட்டினார்.

3 ஆம் பக்கம்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 5th June 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி
# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஜூன் 12, 2008 புரட்சி 7 முழக்கம் 24 விலை : ரூ.2.50


## மேட்டூர் பயிற்சி முகாமில் மகிழ்ச்சியான அறிவிப்பு

# சேலம் மாவட்டக் கழகம் 100 ‘குடிஅரசு’ தொகுப்புகளை வாங்க முடிவு

*பெரியார் திராவிடர் கழகம் வெளியிடவிருக்கும் 27 குடிஅரசு தொகுதிகளடங்கிய 100 தொகுப்பை சேலம் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் வாங்க முடிவு செய்துள்ளது. சேலம் மாவட்டக் கழக சார்பில் செயலாளர் சக்திவேல் மேட்டூர் பெரியாரியல் பயிற்சி முகாமில் இதை அறிவித்தார்.*

சேலம் மாவட்ட பெரியார் திராவிடர் கழக சார்பில் பயிற்சி முகாம் ஜூன் 7, 8 தேதிகளில் மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் சிறப்புடன் நடைபெற்றது. முகாம் தொடங்கும் நாளில் கழகத் தோழரின் மரணம் ஒன்று நிகழ்ந்துவிட்டது. மேட்டூர் பேருந்து நிலையம் அருகே உள்ள பெரியார் படிப்பகத்தை காலை முதல் இரவு வரை முழு நேரமாக இருந்து கவனித்து வந்த கழகத் தோழர் செல்வம், உடல்நலமின்றி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சைகள் பலனின்றி முடிவெய்திவிட்டார். கழகத் தோழர்கள் மேட்டூரிலுள்ள தோழர் செல்வம் இல்லத்துக்கு திரண்டு வந்து, இறுதி வணக்கம் செலுத்தினர். பயிற்சி முகாம் நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், சிற்பி ராசன் மற்றும் கழகத்தினர் இறுதி மரியாதை செலுத்தினர். பகல் 12 மணியளவில் எவ்வித மூடச் சடங்குகளும் இன்றி உடல் அடக்கம் நடைபெற்றது.

கழகத் தோழர்கள் ஏராளமாக இறுதி நிகழ்ச்சியில் பங்கேற்றனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி - கருநாடக அரசு தொடர்ந்துள்ள வழக்கு விசாரணைக்காக கருநாடக மாநில நீதிமன்றம் செல்ல வேண்டியிருந்ததால் இந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்த போது அவர் கருநாடகத்தில் கொல்லேகால் நீதிமன்றத்தில் இருக்க வேண்டியதாயிற்று. ஏழாம் தேதி இரவுதான் அவர் மேட்டூர் வந்து சேர்ந்தார்.


பயிற்சி வகுப்பின் காலை நிகழ்ச்சிகள் தள்ளி வைக்கப்பட்டு, பிற்பகல் 2.30 மணியளவில் தொடங்கியது. இந்தப் பயிற்சி, ஏற்கனவே பயிற்சிப் பெற்ற தோழர்களைத் தவிர்த்து, புதிதாக கழகத்தில் சேர்ந்த தோழர்களுக்காக மட்டுமே நடத்தப்பட்ட பயிற்சியாகும். முதலில் சென்னையைச் சேர்ந்த மனித உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் தென்பாண்டியன் - ‘பாகுபாடு’ என்ற தலைப்பில் பயிற்சி அளித்தார். அரசியல் சட்டத்தின் 14, 19, 21வது பிரிவுகள் வழங்கும் சமத்துவம், பேச்சு, மாண்பு தொடர்பான உரிமைகளையும், இந்த உரிமைகளோடு 2005 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்திருத்தத்தின்படி ஆரம்பக் கல்வியும் அடிப்படை உரிமையாக்கப்பட்டுள்ளதையும், அய்.நா.வின் சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் 2வது பிரிவு இனம், சாதி, பால் அடிப்படையில் பாகுபாடுகள் காட்டக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளதையும் விரிவாக எடுத்துக்காட்டி, சட்டங்கள் வழங்கியுள்ள உரிமைகள், சமூகத்தில் பாதுகாக்கப்படாமல், பாகுபாடுகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளதை பல்வேறு உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி விளக்கமளித்தார். சட்டமன்றம், அரசியல் கட்சிகள், மக்கள் பிரச்சினைகளிலிருந்து விலகி நிற்பதையும், இளைஞர்களின் எதிர்காலத்துக்கு எந்த வேலைத் திட்டமும் உறுதி செய்யப்படாத, நாட்டின் அவலத்தையும் சுட்டிக் காட்டிப் பேசினார். பாகுபாடுகளை ஒழித்து சமத்துவத்துக்காக, பெரியார் போராடியதை விளக்கிக் கூறினார். பயிற்சியில் பங்கேற்பாளர்களின் மனத் தடைகளை அகற்றும் விளையாட்டு முறைகளைப் பயன்படுத்தி, பயிற்சியாளர் பங்கேற்பை இலகுவாக்கினார். உணர்ச்சிகரமான முழக்கங்கோடு தனது உரையை நிறைவு செய்தார். தேனீர் இடைவேளைக்குப் பிறகு மாலை 5.30 மணியளவில் சென்னை வழக்கறிஞர் வெற்றிச்செல்வன், உலக மயம் பற்றி, விரிவான விளக்கங்களை பயிற்சியாளர்களின் பங்கேற்போடு நடத்தினார். உலகமயமாக்கல் நிகழ்ந்துவரும், ஒரு சமூகத்தின் மீது நின்று கொண்டு நாம் பாகுபாடுகளுக்கு எதிராக சமத்துவம் கோரும் உரிமைகளுக்குப் போராட வேண்டியிருக்கிறது என்பதையும், மக்கள் நலன் காக்கும் கடமையை சட்டப்படி ஏற்றுக் கொண்டுள்ள அரசு, மக்கள் நலன் சார்ந்த உரிமைகளைக் காப்பாற்றும் கடமைகளை கட்டாயமாக செயல்படுத்த வேண்டியிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி, இந்தக் கடமைகளை நிறைவேற்றும் அமைப்பு முறைகளை வரையறுத்து, வழி நடத்துவதற்கே அரசியல் சட்டம் வகுக்கப்பட்டது என்பதை எடுத்துக் காட்டினார். ஆனால் உலக மயம் இதற்கு எதிர்த்திசையில் செயல்படுகிறது என்று குறிப்பிட்டார். உலக மயம் என்ற கொள்கை மக்கள் கண்ணோட்டத்தில் பார்க்கப் படுவதில்லை. அதில் வர்த்தகக் கண்ணோட்டமே மேலோங்கி நிற்கிறது. தொழில் வளர்ச்சி என்ற பெயரில் நகர் மயமாக்கப்படும் போக்கு, மிக விரைவாக நிகழ்ந்து கொண்டிருப்பது, தமிழ்நாட்டில்தான் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன என்று குறிப்பிட்ட அவர், 1944 ஆம் ஆண்டிலிருந்தே உலகமய கொள்கைகளுக்கான விதை இந்தியாவில் போடப்பட்டுவிட்டது என்று குறிப்பிட்டார். உலகமயமாக்கல் படிப்படியாக அமுலாக்கப்பட்ட வரலாறுகளையும், கல்வி, விவசாயம், மருத்துவம் மற்றும் சட்டத் துறையில், இந்தக் கொள்கை உருவாக்கிய பாதிப்புகளையும் விரிவாக எடுத்துரைத்தார். இரவு 8 மணி வரை அவரது பயிற்சி வகுப்பு நீடித்தது. பயிற்சியாளர்கள் பல்வேறு சந்தேகங்களை எழுப்பி விவாதித்தனர்.

### இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் பயிற்சி காலை 10 மணியளவில் தோழர் சிற்பி ராசனின் ‘மந்திரமா தந்திரமா’ பயிற்சிகளோடு தொடங்கியது. பல்வேறு மூடநம்பிக்கைகளை விளக்கி சிற்பிராசன் பயிற்சியளித்தார். தேனீர் இடைவேளைக்குப் பிறகு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கடவுள் எனும் தலைப்பில் பயிற்சியளித்தார். அதனைத் தொடர்ந்து, குடந்தையில் கழகம் நடத்திய நடிகவேள் நூற்றாண்டு விழாவில் முரசொலி முகிலன் குழுவினர் நிகழ்த்திய பகுத்தறிவு கலை நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. மதிய உணவுக்குப் பிறகு மீண்டும் 3 மணிக்கு வகுப்புகள் தொடங்கின. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகள் பெரியாரியலை மேலும் வளர்த்தெடுத்து, மக்களிடையே கொண்டு செல்ல வேண்டிய தேவை; கழகத்தை மேலும் வலிமையாக்க பின்பற்ற வேண்டிய செயல் உத்திகள் போன்ற பிரச்சினைகள் குறித்து பேசினார். விவாதங்களில் தோழர்களும் பங்கேற்றனர். தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘குடிஅரசு’ தொகுப்புகளை மக்களிடம் கொண்டு செல்லுவதில் கழகத்தின் செயல்பாடுகள்; பயிற்சிப் பெற்ற தோழர்கள், எதிர்காலத்தில், இயக்கத்துக்கும், பெரியாரியலுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றி விளக்கிப் பேசினார். பயிற்சிப் பெற்ற தோழர்கள், தாங்கள் மேற்கொள்ளப் போகும் நடவடிக்கை பற்றிய உறுதியறிவிப்பை வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

4 ஆம் பக்கம்

## கழக முயற்சியால் – சட்ட விரோத கோயில் சென்னையில் இடிப்பு



*அரசு விதிகளுக்கு மாறாக - பொது விடங்களில் சட்ட விரோதமான கோயில்கள் பெருகி வருகின்றன. இந்த நிலையில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் சட்டப்படியாக இதைத் தடுக்கும் முயற்சிகளில் வாய்ப்புள்ள பகுதிகளில் இறங்கியுள்ளனர். சென்னை சேத்துப்பட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் பூங்காவை ஆக்கிரமித்து கோயில் கட்டப்பட்டது. இதை எதிர்த்து சேத்துப்பட்டு பகுதி கழகத் தோழர் ப.இராஜன் உயர்நீதி மன்றத்தில் பொதுநலன் வழக்கு தொடர்ந்தார். நீதிபதி ஏ.பி.ஷா, நீதிபதி பிரபா சிரீதேவன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது. கழக வழக்கறிஞர் சு. குமாரதேவன், கழகத் தோழர் சார்பில் வாதாடினார். சட்ட விரோதமாக ஆக்கிரமித்து கட்டப்பட்ட கோயிலை மாநகராட்சி, ஜூன் 9 ஆம் தேதிக்குள் அகற்ற வேண்டும் என்றும், இந்த நடவடிக்கைக்கு மாநகராட்சி அதிகாரிகளும், காவல்துறையும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும், நீதிபதிகள் உத்தரவிட்டனர். இதன்படி கடந்த ஜூன் 4 ஆம் தேதி காலை மாநகராட்சி ஊழியர்கள் சட்ட விரோத கோயிலை அகற்றினர்.*

# தாழ்த்தப்பட்டோர் இடஒதுக்கீட்டு இடங்கள் பொறியியல் கல்லூரிகளில் பூர்த்தி செய்யப்படுவது இல்லை

தமிழ்நாட்டில் அரசு கல்லூரிகள் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டு இடங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்ற அதிர்ச்சியான தகவல்கள் வெளி வந்துள்ளன. அரசு வெளியிட்டுள்ள ஆவணங்களே இதற்கு சான்றாக உள்ளன.

2007-08 ஆம் ஆண்டுக்கான கல்வித் துறையின் கொள்கைக் குறிப்பேடு (அரசு ஆவணம்) தந்துள்ள தகவலின் படி, தமிழ்நாட்டில் 247 பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இதில் 238 சுயநிதி பொறியியல் கல்லூரிகள் இந்த சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் அனுமதிக் கப்பட்டுள்ள (2007-2008-ல்) மொத்த மாணவர்கள் 73807. இதன்படி, ஷெட்யூல்டு பிரிவினருக்கு 18 சதவீத ஒதுக்கீட்டின்படி 13,285 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சேர்க்கப்பட்ட மாணவர்களோ, 6942 தான் (அதாவது 9 சதவீதம்).

சுயநிதி கல்லூரிகளில் மட்டுமல்ல, அரசு கல்லூரிகளிலும், இதே நிலை தான். அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில், 3662 இடங்கள் உள்ளன. இதில் ஷெட்யூல்டு பிரிவினர் 574 பேர் மட்டுமே (அதாவது 15.6 சதவீதம்).

அரசின் கொள்கை அறிக்கையின் படி, நடப்பாண்டில் (2008-09), தமிழ் நாட்டில் 263 சுயநிதி பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இதில் சேர்க்கப் படும் மொத்த மாணவர்கள் 1,04,814. இதில் 89985 இடங்கள் நிரப்பப்பட் டுள்ளன. தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 16,197 பேருக்கு இடமளிக்க வேண்டும். ஆனால், சேர்க்கப்பட்ட வர்கள் 8373 பேர் மட்டுமே (அதாவது 9 சதவீதம்).

அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரி களில் 2209 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் ஷெட் யூல்டு பிரிவு மாணவர்கள் 320 மட்டுமே (அதாவது 14.48 சதவீதம்).

அரசு நேரடியாக நடத்தும் பொறி யியல் கல்லூரிகளிலும் ஷெட்யூல்டு பிரிவினருக்கான இடங்கள் முழுமை யாக நிரப்பப்படவில்லை. 9 இடங்கள் நிரப்பப்படாமலே உள்ளன. அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில் ஷெட்யூல்டு பிரிவினருக்கான 78 இடங் களும் நிரப்பப்படவில்லை. சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 7824 இடங்கள் நிரப்பப்படவில்லை. ஆக. 2007-2008-ம் ஆண்டில் பொறி யியல் கல்லூரிகளில் ஷெட்யூல்டு பிரிவினருக் கான 7911 இடங்கள் நிரப்பப்பட வில்லை.

அரசு கல்லூரிகளில் பழங்குடி யினருக்கான 19 இடங்களில், இரண்டு இடங்கள் நிரப்பப்பட வில்லை. அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பழங்குடி யினருக்கான 22 இடங்களில் 4 இடங்கள் நிரப்பப்படவில்லை. சுயநிதி பொறி யியல் கல்லூரிகளில் நிரப்பப்பட வேண்டிய 900 இடங்களில், 169 பேர் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளனர். 731 இடங்களில் பழங்குடியினர் சேர்க்கப் படவில்லை.

சுயநிதி கல்லூரிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடங்கள் 17,997. ஆனால் சேர்க்கப்பட்டவர்களோ 16,548 தான். அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடங்கள் 441, சேர்க்கப்பட்டுள்ளோர் 378 பேர் தான்.-

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார் - இந்த ஆய்வை வெளியிட்டுள்ளார்.

தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட மாணவர்கள், மிகப் பெரு மளவில் சுயநிதி பொறியியல் கல்லூரி களில் நுழைய முடியாதவர்களாக உள்ளனர் என்பதை ஆய்வு சுட்டிக் காட்டுகிறது. காரணம் - இந்த நிறுவனம் கேட்கும், கல்வித் தொகையைக் கட்டவியலாத நிலையில் - இவர்கள் உள்ளார்கள் என்பதுதான். ✦

## விழுப்புரம் மாவட்டத்தில் கழகக் கூட்டங்கள்

விழுப்புரம் மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம் சார்பாக 9.5.08 வெள்ளிக்கிழமை, 10.5.08 சனிக்கிழமை இரண்டு நாள் தொடர் பகுத்தறிவு பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற்றது. 9.5.08 வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வானாபுரத்தில் தோழர் செ. பிரபு தலைமையில் ந. அய்யனார் துவக்கவுரையாற்ற, மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் ப. கண்ணன் சிறப்புரையாற்றினார்.

மாலை 3 மணியளவில் சு. குளத்தூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு பெ. கோவிந்தன் தலைமையில் மாவட்டச் செயலாளர் மு.வ. நடராசன் கருத்துரை வழங்கினார். மாலை 6 மணியளவில் தொழுவந்தாங்களில் நடைபெற்ற கூட்டத்திற்கு க. கோவிந்தன் தலைமையேற்க, ப. கண்ணன் கருத்துரை வழங்கினார்.

10.5.08 சனிக்கிழமை காலை 8 மணியளவில் சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் சி. சாமிதுரை தலைமையேற்க மு.வ. நடராசன் கருத்துரை வழங்கினார். அன்று மாலை 3 மணியளவில் மூரார்பாளையத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு வழக்கறிஞர் ப. கண்ணன் கருத்துரை வழங்கினார். மாலை 6 மணியளவில் நெடுமானூரில் நடைபெற இருந்த கூட்டம் மழையின் காரணமாக நிறுத்தப்பட்டது.

ஆறு கிராமங்களில் அனைத்துக் கூட்டங்களிலும் காவை இளவரசன் சிறப்புரையாற்றி, ‘மந்திரமல்ல தந்திரமே’ என்ற அறிவியல் விளக்க கலை நிகழ்ச்சியை நடத்தினார்.

கூட்டத்திற்கு ரவிவர்மா ஒலி, ஒளி அமைத்து தந்தார். கல்லை சி. ஆசைத்தம்பி தோழர்களுக்கு உணவுகள் ஏற்பாடு செய்து தந்தார். மு.ராசா, மா. அன்பழகன், மு.வ. செல்வராஜ, சம்பத், கி.ஆனந்தன், மா. தமிழ்குமார், இளையராசா, ச. சாமிதுரை ஆகியோர் பிரச்சார பயணத்தில் பங்கேற்றனர்.



## மூடநம்பிக்கையற்ற கல்வி

“சிறு பிள்ளைகளுக்குக் கொடுக்கும் பாடப் புத்தகங்களிலேயே மூடநம்பிக்கைக் கொண்ட புராணக் கதைகள் புகுத்தப்படுகின்றன. இங்குக் கல்வி கொடுப் பவர்கள் இந்தக் கல்வியால் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கோ, வாழ்க்கைக்கோ எவ்வளவு பயன்படும் என்பதை முக்கியமாய்க் கவனிப்பதில்லை.”

“உலகக் கல்வி வேறு, பகுத்தறிவு வேறு, பட்டம் வேறு. பெரிய டாக்டராய் இருப்பான். ஆனால், அவனும் மூத்திரமும் சாணியும் சாப்பிட்டால் மோட்சத்திற்குப் போகலாம் என்றுநினைப்பான். பெரிய வான சாஸ்திர நிபுணனாக இருப்பான். அவனும் தன் இறந்த தந்தைக்கு (திதி மூலம்) அரிசி, பருப்பு, காய்கறி, செருப்பு அனுப்புவான் - அவனும் தன் மனைவியையும், மக்களையும் வீட்டுக்குத் தூரம் என்று வீட்டுத் திண்ணையில் தள்ளி மூடி வைத்து விட்டு உள்ளே தாழ்ப்பாள் போட்டுத் தூங்குவான்.”

“கல்வியானது நிகழ்காலத்திலும், எதிர்காலத்திற்குமாக ஓர் இணையற்ற முதலீடு... கல்வி அனைவருக்கும் தேவையான ஒன்று. சமத்துவம், சமயச் சார்பின்மை, சனநாயகம் போன்ற அரசியல் சட்டத்தில் காணப்படும் உயரிய குறிக்கோளுடைய கல்வியே உகந்த வழி; மேலும் நம் பொருளாதாரத்தில் பல்வேறு நிலைகட்கும், பிரிவுகட்கும் தேவையான தேர்ந்த மனித சக்தியை உருவாக்கி வழங்கக் கூடியது கல்வி மட்டுமேயாகும்.”

– **பெரியார்**

# சென்னையில் மூத்தத் தலைவர் திருவாரூர் தங்கராசுக்கு பாராட்டு! நாத்திகர் விழா!

சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழக சார்பில் கழகத்தில் மூத்தத் தலைவர் திருவாரூர் தங்கராசு அவர்களுக்கு பாராட்டும், நாத்திகர் விழாவும், சென்னையில் ஜூன் 14 ஆம் தேதி நடைபெற விருக்கிறது. விழாவினையொட்டி சென்னை நகரின் முக்கிய பகுதிகளில் கழகத் தோழர்கள், சுவரெழுத்து களை எழுதி விளம்பரம் செய்துள்ளனர். கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக கழகத் தோழர்கள், விழாவுக்கான பணிகளில் தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே நாத்திகர் விழாவுக்கு இந்துத்துவா சக்திகளின் மிரட்டலுக்கு பணிந்து, சென்னை மாநகர காவல்துறை மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணிக்கு அனுமதி மறுத்தது. புதுவையிலும் கழகத்தின் நிகழ்ச்சிக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. இதை எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், நீதிமன்றம், இந்தத் தடைகளுக்கு எதிராக தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து, மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியோடு கழகத்தின் மூத்த தலைவர் தங்கராசுக்கு கழகம் பாராட்டு விழாவை நடத்துகிறது. நிகழ்ச்சி விவரம்:

14.6.2008 சனிக் கிழமை மாலை 3 மணிக்கு மாபெரும் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் முத்துரங்கன் சாலை, சென்னை தியாகராயர் நகர் பேருந்து நிலையம் அருகிலிருந்து புறப்படுகிறது. எ. கேசவன் தலைமையில் மருத்துவர் எஸ். பழனிச்சாமி துவக்கி வைக்கிறார்.

மாலை 5 மணி அளவில் கலைஞர் கருணாநிதி நகர், அரசு மருத்துவமனை எதிரில் நடிகவேள் எம்.ஆர். ராதா நினைவு நிழற்குடை திறப்பு விழா. வழக்கறிஞர் செ. துரைசாமி தலைமையில் தென்னிந்திய திரைப்பட நடிகர் சங்க பொதுச்செயலாளர் திரு. ராதாரவி திறந்து வைக்கிறார்.

மாலை 5.30 மணி அளவில் அண்ணா முதன்மைச் சாலை, எம்.ஜி.ஆர். நகரில் நடைபெறும் தீமிதி நிகழ்ச்சிக்கு வழக்கறிஞர் வை. இளங்கோவன் தலைமை தாங்குகிறார்.

மாலை 6 மணி அளவில் கலைஞர் கருணாநிதி சாலை, எம்.ஜி.ஆர். நகரில் நடைபெறும் திருவாரூர் தங்கராசு அவர்களுக்கு பாராட்டு விழா நிகழ்ச்சிக்கு கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் தலைமை தாங்குகிறார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்தத் தலைவர் ஆர். நல்லக்கண்ணு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குனர் மணிவண்ணன், வழக்கறிஞர் செ. துரைசாமி, கழகப் பொதுச்செயலாளர்கள் கோவை கு. இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், நாத்திகம் இராமசாமி, வழக்கறிஞர் சு. குமாரதேவன், பெரியார் பெருந்தொண்டர் வி.அ. பழனி, தோழர் பா. பாரதி ஆகியோர் பாராட்டுரை வழங்குகின்றனர். நிறைவாக பெரியார் பெருந்தொண்டர் திருவாரூர் தங்கராசு ஏற்புரை வழங்குகின்றார்.

சமர்ப்பா குழுவினர் எழுச்சி இசையோடு துவங்கும் இந்நிகழ்ச்சிக்கு தபசி. குமரன் முன்னிலை வகிக்க, கரு. அண்ணாமலை வரவேற்க, கு. அன்பு தனசேகர் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்க, இரா. உமாபதி நன்றி கூறுகிறார்.

### அப்பா – மகன்

**மகன் :** சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கு கல்விக் கட்டணத்தை ரூ.32.500-லிருந்து ரூ.62,500 ஆக தமிழக அரசு உயர்த்தியுள்ளதே அப்பா!

**அப்பா :** இது அநீதி; அக்கிரமம் மகனே!

**மகன் :** ஒவ்வொரு நாளும் கலைஞரையும், அரசு அறிவிப்புகளையும் பாராட்டி அறிக்கை வெளியிடும் நிகர்நிலை பல்கலைக்கழகம் நடத்தும் கி.வீரமணி, இதில் மவுனம் காப்பது ஏன் அப்பா? கல்விக் கட்டண உயர்வை ஆதரிக்கிறதா? எதிர்க்கிறாரா?

**அப்பா :** எனக்குத் தெரியாது மகனே!

## 'அனுமான்' தலைவராகிறார்!

உ.பி. மாநிலத்தில் இது நடந்துள்ளது; லக்னோவில் தனியார் தொழில்நுட்பக் கல்லூரியின் நிர்வாகத் தலைமைக்கு - ஒரு 'ஆசாமி' தலைவராகியுள்ளார். உலகிலே - எந்த ஒரு கல்வி நிறுவனத்திலும் இதுபோல் ஒரு 'தலைவர்' கிடையாது என்று அடித்துச் சொல்லலாம். இந்தத் தலைவர் வாய்ப் பேச மாட்டார். மனித உடலும் குரங்குத் தலையுமாக காட்சியளிப்பார். நீண்ட வாலுடன் பறப்பார். அண்டை தேசத்துக்குள் புகுந்து நெருப்பு வைப்பார். வேறு யார் ? சாட்சாத் அனுமான் தான் !

கல்லூரியில் இந்த நிர்வாகக் குழு "தலைவருக்கு" தனி இருக்கையாம். அவருக்கு எதிரே ஒரு கம்ப்யூட்டராம். நிர்வாகக் குழு துணைத் தலைவரும், கம்ப்யூட்டரும், 'தலைவர்' காட்டும் வழியில் செயல்படுவார்களாம்! "இதுவும்கூட, ஒரு புத்திசாலித்தனமான முடிவுதான். நிர்வாகக் குழுவில் தலைவர்களை இப்படி உண்மையான சிலைகளாக்கிவிட்டால், பிரச்சினைகள் ஏதும் வராதே! "சீட்டுக்கு எவ்வளவு பணம் வாங்கினாய் ? கணக்கு இருக்கிறதா ?" என்றெல்லாம் கேள்வி கேட்கக் கூடிய 'மனிதர்'களை தலைவராக்குவதை விட எது நடந்தாலும் 'கல்லாக' நிற்கும் 'தலைவர்களை' வைத்துக் கொள்வது நல்லது தானே என்கிறார் ஒரு கிண்டல் பேர்வழி. மரணத்தின் வாசலில்கூட, தன்னை நாத்திகன் என்று பிரகடனப்படுத்திய மாவீரன் பகத்சிங் பெயரில் உள்ள கல்லூரி இது. பகத்சிங் கல்லூரிக்கு நிர்வாகக் குழு தலைவர் அனுமானாம்!

அதில் இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு நடத்தும் கூட்டங்களுக்கு எல்லாம் அனுமான் பறந்து போவாரா ? அங்கு போய் பாடத் திட்டங்களை எப்படி மாற்றியமைக்கலாம் என்று விவாதிப்பாரா ? விமானத்தில் பறப்பாரா ? அல்லது வாலை நீட்டிக் கொண்டு, அவரே பறப்பாரா ? இந்தக் கேள்விகளை எழுப்பினால், சுப்ரமணிய சாமிகள், மனம் புண்படுகிறது என்று வழக்கு தொடர்ந்து விடுவார்கள் !

இனி - தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு அனுமார்களை தலைவராக்குவதுபோல் நாட்டின் பல்வேறு துறைகளுக்கு இந்துக் கடவுள்களையே தலைவராக்கி விடலாம்.

காவல் துறைக்கு கிருஷ்ணனை தலைவராக்கலாம். திருட்டுகள், குறும்புகள் எதுவுமில்லாமல் பார்த்துக் கொள்வார். அவரைத் தவிர வேறு யாருக்கும் அந்த உரிமைகளை தர மாட்டார் ! கொலைகள் கூட குற்றமில்லை என்று பகவத்கீதையில் அறிவித்தவர் அல்லவா ? எனவே - கொலைக் குற்றவாளிகள் சுதந்திரமாக செயல்படலாம்.

நாரதரை - நாடாளுமன்றத் தலைவராக்கலாம். உறுப்பினர்கள் கலவரம் செய்ய அவரே திட்டங்களைத் தீட்டித் தந்து, நாடாளுமன்ற உறுப்பினர் ஒற்றுமையைக் கட்டிக் காப்பார்.

மகாவிஷ்ணுவை பாதுகாப்புப் பிரிவுத் தலைவராக்கிவிட்டால், அவர் அவதாரம் எடுத்தே நாட்டின் எதிரிகளை 'துவம்சம்' செய்து விடுவார்.

இப்படி சகல துறைக்கும் தலைமை தாங்கக் கூடிய தகுதி படைத்தவர்கள் புராணங்களிலும், இதிகாசங்களிலும் ஏராளம் உண்டு. இதேபோல் -

'ராமனை'யும் பிரதமராக்கிவிடலாமா என்று அத்வானியிடம் கேட்டால், அதை மட்டும் அத்வானி ஏற்பாரா என்பது சந்தேகம்தான். இது தனக்கு எதிராக 'வாஜ்பாய் நடத்தும் சதி' என்று கூற மாட்டார் என்பதற்கு உத்தரவாதம் கூற முடியாது.

ஆனாலும், நாடாளுமன்றத் தேர்தலுக்கு பா.ஜ.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் போது இந்தக் கருத்துகளையெல்லாம் பரிசீலிக்கலாம் என்பதற்காக, இந்த ஆலோசனைகளை இலவசமாக காதில் போட்டு வைத்தோம் என்றறிக. ஜெய் அனுமான் !

– கோடங்குடி மாரிமுத்து

# இரட்டை தம்ளர் உடைப்பு சாதி ஒழிப்புக்கு கிடைத்த வெற்றி

— மதிமாறன் —



*மே 16 அன்று சென்னை பாவாணர் நூலக கட்டிடத்தில் நடந்த "மதிமாறன் பதில்கள்" நூல் வெளியீட்டு விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு உரையாற்றினார். இது நிகழ்ச்சியில் நூலாசிரியர் மதிமாறன் நிகழ்த்திய ஏற்புரை.*

'எல்லாப் புகழும் இறைவனுக்கே' என்பது இறை நம்பிக்கையாளர்களின் வாக்கியம். அதையே நான் இப்படி சொல்றேன், எல்லா புகழும் பெரியாருக்கே.

அரசியலில் நமது நிலை பதில் சொல்ற இடத்தில் இல்லை. கேள்வி கேட்கிற இடத்தில்தான் இருக்கு. அதனால் தான் என்னுடைய பதில்களும் கேள்விகளாலேயே நிரம்பியிருக்கு.

டாக்டர் அம்பேத்கராலும், தந்தை பெரியாராலும் பார்ப்பனியத்தை, இந்துமதத்தை நோக்கி எழுப்பப்பட்டக் கேள்விகளுக்கு இன்னைக்கு வரைக்கும் பார்ப்பனர்களிடம் இருந்து எந்த பதிலும் இல்லை. மாறாக கண்டனங்கள்தான் வந்திருக்கு.

வரலாறு நெடுகிலும் பார்ப்பனியம் தனக்கு எதிராக கேள்வி எழுப்பியவர்களை தண்டிச்சிருக்கு. அல்லது அந்தக் கேள்விகளை விழுங்கி செரிமானம் செஞ்சிருக்கு. ஒரு நாளும் அறிவு நாணயத்தோடு அது பதில் சொல்ல முயற்சித்ததுக்கூட இல்லை.

ஆனால், பெரியார் ஒருவர்தான், தொண்டைக்குள் சிக்கிய முள்ளாக பார்ப்பனியத்தை இன்று வரை மூச்சுத் திணற வைக்கிறார். காரணம், பார்ப்பனியம் வேறு, இந்து மதம் வேறு என்று பிரித்துப் பார்க்காத அவருடைய தாக்குதல்தான்.

நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம் இன்னும் தீட்சிதர்களிடம் இருக்கிறது. ஆனால் அதை 64 வது நாயன்மாரான ஆறுமுகசாமியின் மேல் கொளுத்திப் போடத்தான் தீட்சிதர்களால் முடியவில்லை. காரணம், நந்தனின் காலம் தந்தை பெரியாருக்கு முந்தைய காலம். பெரியவர் ஆறுமுகசாமியின் காலமோ தந்தை பெரியாருக்கு பிந்தைய காலம்.

துரியோதனனுக்கு உயிர் தொடையில் என்பது போல், 'இந்து மதத்தின் உயிர் பார்ப்பனியத்தில் இருக்கிறது' என்பதை புரிந்த பெரியார், பார்ப்பனியத்தின் தொடையில் அடித்தார். அது இந்து மதத்தின் தொண்டையைபோய் அடைத்தது. அதனால்தான் பெரியார் 'பார்ப்பான்' என்கிற சொல்லை அழுத்தத்தோடு, உறுதியாக பயன்படுத்தினார்.

'பார்ப்பான்' என்கிற சொல்லை பயன்படுத்தாமல் பெரியார் இந்து மதத்தை எதிர்த்திருந்தால், அவர் இன்று பார்ப்பனர்களால் கொண்டாடப்படுகிற தலைவராக இருந்திருப்பார்.

'பார்ப்பன எதிர்ப்பு' இல்லாமல் இருந்தால், சிற்றம்பல மேடையில் ஏறி தமிழில் பாடுவதற்கு போராடும் துணிவு வந்திருக்காது.

சிற்றம்பல மேடையில் ஏறி மக்கள் கலை இலக்கிய தோழர்களால், தமிழில் பாட முடிந்தது என்றால், அது தமிழ் உணர்வால் கிடைத்த வெற்றியல்ல. பார்ப்பன எதிர்ப்புக்குக் கிடைத்த வெற்றி. பார்ப்பன எதிர்ப்பால், தமிழ் மானம் காக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட சாதி வெறி தமிழனை எதிர்த்து, இரட்டை தம்ளர் முறையை உடைத்து, பெரியார் திராவிடர் கழகத் தொண்டர்களால் உறுதியாக போராட முடிகிறது என்றால், அது வெறுமனே தமிழன் என்கிற உணர்வுக்குக் கிடைத்த வெற்றியல்ல. பெரியார் ஊட்டிய பார்ப்பன எதிர்ப்பு, சாதி ஒழிப்பு என்கிற உணர்வுக்குக் கிடைத்த வெற்றி.

தங்களை முற்போக்காளர்களாக அடையாளப் படுத்திக் கொள்கிற கவிதை, கதை, கட்டுரை எழுதுகிற இலக்கியவாதிகள், விமர்சகர்கள் - வெகுஜன பத்திரிகைகளில் எழுதி தங்களை பிரபலப் படுத்திக் கொள்வதற்காக, அவர்கள் செய்கிற முதல் வேலை 'பார்ப்பான்' என்கிற வார்த்தையை பயன்படுத்துவதை நிறுத்திக் கொள்வது.

அந்தப் பத்திரிகைளில் மட்டுமல்ல, முழுவதுமான தங்களின் எழுத்துக்களில்கூட அவர்கள் 'பார்ப்பான்' என்ற வார்த்தையை கொஞ்சம் கொஞ்ச மாக தவிர்த்து விடுகிறார்கள். வெகுஜன பத்திரிகைகளின் எழுத்து நடைக்கு தங்களை மாற்றிக் கொள்கிறார்கள்.

இப்படியெல்லாம் மாறினால்கூட பார்ப்பனப் பத்திரிகைகள், திராவிட இயக்க ஆதரவு எழுத்தாளர் களுக்கு எப்போதாவது ஒரு வாய்ப்பும், அதற்கு நேர் எதிராக, திராவிட இயக்க எதிர்ப்பு எழுத்தாளர் களுக்கு எப்போதும் ஒரு முக்கியத்துவமும் தந்து கொண்டுதான் இருக்கின்றன.

நாலு வருஷத்துக்கு ஒரு முறை நம்மள ஒரு பேட்டி எடுத்து போடுறாங்க அப்படிங்கறதுக்காக, நம்மாளுங்களும், இந்த வெகுஜன பத்திரிகைகளின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டிக்கறதையும் விட்டுறாங்க.

இந்தியச் சமூக அமைப்பில் மிகப் பெரும்பாலும், ஒரு தனி நபரின் வெற்றி ஏதோ ஒரு வகையில் பார்ப்பனியத்தோடு சமரசம் செய்து கொள்ளாமல் சாத்தியப்படுவதில்லை.

பெரியாரின் காலங்களில் அவர் செய்திகளை புறக்கணித்த பார்ப்பனப் பத்திரிகைகள், இன்று அவரின் பார்ப்பன எதிர்ப்பை இருட்டடிப்புச் செய்து அவரை ஒரு பொதுவான தலைவரைப் போல் சித்தரித்து தங்களை நடுநிலையாளர்களாகக் காட்டிக் கொள்கின்றன.

ஒரு நடிகனாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பாத நடிகவேள் எம்.ஆர்.ராதா, பெரியாரின் தொண்டராக தன்னை அடையாளப் படுத்திக் கொண்டார்.

பத்திரிகைகள் அவரை ஒரு நடிகனாக பேட்டி காணச் சென்றபோது, பத்திரிகைகளையும், ரசிகர் களையும் கடுமையாக கண்டித்திருக்கிறார்.

பத்திரிகையாளர்களை 'காக்கா' பிடிக்கிற எழுத்தாளர்கள், பிரபலங்கள் மத்தியில், ரசிகர்களை அல்லது வாசகர்களை 'தன் உயிரினும் மேலான வர்கள்' என்று ஏமாற்றி பிழைக்கிற நடிகர்கள் மத்தியில், நடிகவேள் எம்.ஆர்.ராதா தனக்கு ரசிகனாக இருப்பவரைக்கூட கடுமையாக கண்டித்திருக்கிறார்.

ஒரு பத்திரிகையில், ஒரு வாசகர், நடிகவேள் எம்.ஆர்.ராதாவிடம், "தாங்கள் இந்த நாட்டின் முதல் மந்திரியானால்?" என்று கேட்ட கேள்விக்கு,

நடிகவேள், "இந்த மாதிரி கேள்வி கேட்பவர்களை தூக்கில் போட சட்டம் கொண்டு வருவேன்" என்று பதில் அளித்திருக்கிறார்.

அதேபோல், நடிகவேளின் சிறை வாழ்க்கையில் ஒரு சம்பவம், ஒரு பார்ப்பனர் திருட்டு வழக்கில் கைதாகி சிறைக்கு வந்திருக்கிறார். "பார்ப்பனர்களை அய்யர் என்று அழைக்கக் கூடாது" என்கிற பெரியார் கருத்தில் ஊறிய நடிகவேள், அந்தக் கைதியை, 'அய்யரே... அய்யரே...' என்று உரக்கக் கூவி அடிக்கடி அழைக்கிறார்.

உடன் இருந்தவர் நடிகவேளிடம், "நீங்கதான் அய்யர்ன்னு சொல்ல மாட்டிங்களே, அப்புறம் எதுக்கு அவரை அய்யர் அய்யர்ன்னு கூப்புடுறீங்க?" என்று கேட்டாராம்.

அதற்கு நடிகவேள், "அய்யர்ன்னா யோக்கிய மானவன்னு ரொம்ப பயலுங்க நினைச்சிகிட்டு இருக்கான். திருட்டு வழக்கில வந்திருக்கிறவன் ஒரு அய்யர்ன்னு மத்தக் கைதிக்கெல்லாம் தெரியட்டு மேன்னுதாய்யா அப்படி கூப்பிடுறேன்" என்றாராம். இதுதான் எம்.ஆர்.ராதா.

ஆனால், பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும் அவரை ஒரு சிறந்த நடிகராக மட்டுமே சித்தரித்து, அவரின் அரசியலான பார்ப்பன எதிர்ப்பை இருட்டடிப்பு செய்தன - என்றார் மதிமாறன்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## செப்.17 இல் – 27 தொகுதிகள்
# ‘குடிஅரசு’ முன்பதிவுத் திட்டம்

ஆய்வாளர்கள், தமிழின உணர்வாளர்களின் நீண்டகால விருப்பம் செயல்வடிவம் பெறுகிறது.

பெரியாரின் எழுத்துகளையும், பேச்சுகளையும் முழுமையாகத் திரட்டி சிதைக்காமல் தமிழ் கூறும் நல்லுலகத்தின் முன் பெரியார் திராவிடர் கழகம் பெருமையுடன் ஒப்பளிக்கிறது!

தமிழ்நாட்டின் வரலாற்றோடு பிணைந்து நிற்கும் பெரியாரின் ‘எழுத்தும் பேச்சும்’ கால வரிசைப்படி தொகுப்புகளாக, உங்கள் கரங்களில் தவழ இருக்கிறது.

தமிழகத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திய பெரியாரின் புரட்சிகர பச்சை அட்டை ‘குடிஅரசு’ ஏட்டில், புதைந்து கிடந்த பெரியார் சிந்தனைகளை தேடிப் பிடித்து,

1925 முதல் 1938 முடிய சுயமரியாதை இயக்கக் காலம் முழுவதும் தொகுக்கப்பட்டு 27 தொகுதி களாக, வெளிவர இருக்கின்றன.

ஒவ்வொரு தொகுதியும் 400 பக்கங்களுக்கு மேல்!

ரூ.5400 விலையுள்ள இத் தொகுதிகள் முன் பதிவு திட்டத்தின் கீழ் ரூ.3500-க்கே உங்களுக்கு கிடைக்கும்.

ரூ.3500 முன் பணம் அனுப்பி, முன் பதிவு செய்து கொள்ள வேண்டிய கடைசி தேதி, ஆகஸ்ட் 31.

வரைவோலையாகவோ (டிராப்ட்), பணவிடை வழியாகவோ (மணியார்டர்) மட்டும் அனுப்ப வேண்டும். காசோலைகள் (செக்) அனுப்ப வேண்டாம்.

பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஆம் தேதி - 27 தொகுதிகளும் வெளி வருகின்றன.

ஒவ்வொரு தமிழர் இல்லத்திலும் இடம் பெற வேண்டிய அரிய தொகுப்பு!

இந்தத் தொகுதிகளை நீங்கள் விரும்பும் நூலகத்துக்கும், பள்ளி, கல்லூரிகளுக்கும், ஆய்வு மய்யங்களுக்கும் நினைவுப் பரிசுகளாக நீங்கள் வழங்கி, என்றென்றும் நிலைக்கும் புகழுக்குரிய கடமையை ஆற்றலாம்.

ஏற்கனவே கழகத்தால் வெளியிடப்பட்ட மூன்று தொகுதிகளும், பல புதிய சேர்க்கை களோடு, கூடுதல் பக்கங்களில் இப்போது, இத் தொகுதிகளோடு இணைத்து, மீண்டும் வெளியிடப்படுகிறது.

தமிழின உணர்வாளர்களே! பெரியாரிய லாளர்களே! சமூக மாற்றத்துக்கு உழைக்கும் தோழர்களே!

முன்பணம் செலுத்தி, உங்கள் தொகுதிளை உறுதி செய்து கொள்ளுங்கள்!

**அனுப்ப வேண்டிய முகவரி:**

தா.செ.மணி, பெரியார் படிப்பகம், மேட்டூர் அணை-1,
சேலம் மாவட்டம்-636 401

வரைவோலையாகவோ (D.D.), பணவிடையாகவோ (எம்.ஓ.) அனுப்பலாம்.
**‘T.S. MANI’** என்ற பெயரில் வரைவோலை எடுக்க வேண்டும்.
மேட்டூர் அணையில் மாற்றத்தக்க வங்கி வரைவோலைகளாக இருத்தல் வேண்டும்.
காசோலை (Cheque) ஏற்க இயலாது.

**– பெரியார் திராவிடர் கழகம்**

முதல் பக்கத் தொடர்ச்சி

“சாதி மறுப்பு திருமணம் தான் செய்வேன்; குறைந்தது 5 புதிய தோழர்களை ஓராண்டில் இயக்கத் துக்கு கொண்டு வருவேன்; இனி நண்பர்களிடம் உரையாடும்போது, பெரியார் கொள்கைகளைப் பேசுவேன்; பன்னாட்டு நிறுவனங்களின் குளிர்பானங் களை குடிக்க மாட்டேன். இனி கிரிக்கெட் விளையாட மாட்டேன்; பறையடிக்கும் பயிற்சி பெறுவேன்; வீதி நாடகக் குழுவை உருவாக்குவேன்; கழக ஏட்டுக்கு புதிய சந்தாக்களை சேர்ப்பேன்” என்று தோழர்கள் பலரும் தங்களின் உறுதி ஏற்பை அறிவித்தனர்.

தனது பெண்ணை புரட்சிகரப் பெண்ணாக வளர்ப்பேன் என்று முகாமில் பங்கேற்ற ஒரு தோழியர் அறிவித்தார்.

சேலம் மாவட்டம் கழக சார்பில்,. குடிஅரசு தொகுதிகளின் 100 தொகுப்பை வாங்குவதாக மாவட்ட செயலாளர் சக்திவேல், பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார். தனது சொந்தப் பொறுப்பில் 5 தொகுப்புகளை வாங்கி, ஒரு தொகுப்பை (27 தொகுதி) தனக்கும், எஞ்சிய 4 தொகுப்பை கழகத் தலைமை பரிந்துரைக்கும் நிறுவனங்களுக்கும் நன்கொடையாக வழங்குவதாக, சிற்பிராசன் பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார். புதிய பயிற்சியாளர்கள் அனைவருக்கும் கழகம் வெளியிட்டுள்ள பெரியார் நூல்களை சிற்பி ராசன் அன்பளிப்பாக வழங்கினார்.

கழகத்தை நோக்கி புதிதாக வந்துள்ள 20, 25 வயதுள்ள இளைஞர்கள் 60 பேர் பங்கேற்றனர். புதிய இளைஞர்களைக் கருத்தில் கொண்டு, பெரியாரியலின் அடிப்படையான கொள்கைகள், எளிமையாக எடுத்து வைக்கப்பட்டன. தோழர் சிற்பி ராசன் இரு நாட்களும், கழகத் தோழர்களோடு ஒன்றாக இருந்து, மந்திரமா தந்திரமா நிகழ்ச்சிகளை செய்யும் பயிற்சிமுறைகளை விளக்கிக் காட்டினார்.

மாவட்டத் தலைவர் மார்ட்டின், செயலாளர் சக்திவேலு, காவலாண்டியூர் விஜயன், கோகுல கிருட்டிணன் (இளம்பிள்ளை), ஆசைத்தம்பி (மேட்டூர்), கோவிந்தராசு (பொருளாளர்) உள்ளிட்ட தோழர்கள் முகாமுக்கு சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

இந்தப் பயிற்சி - தங்களுக்கு புதிய கொள்கை வெளிச்சத்தையும், சமூகப் பார்வையையும் தந்துள்ள தாகக் கூறிய இளைஞர்கள், ஊர்த் திரும்பியவுடன், பெரியாரியலை - நண்பர்களிடமும், குடும்பத்தினரிடம் பரப்பவும், பெரியார் திராவிடர் கழக அமைப்பை உருவாக்கவும் தீவிரமாக செயல்படுவோம் என்று கூறி, விடை பெற்றனர். 8 மணியளவில் மாவட்ட செயலாளர் சக்திவேல் நன்றி கூற, பயிற்சி நிறைவடைந்தது.

**– நமது செய்தியாளர்**

# காவேரிப்பட்டிணத்தில் கழகம் உதயம்




கிருட்டிணகிரி மாவட்டம் காவேரிப் பட்டிணத்தில் பெரியார் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டுள்ளது. கழகத்தின் முதல் கூட்டம் மே 28 மாலை காமராசர் பேருந்து நிலையம் அருகே சிறப்புடன் நடைபெற்றது. மேட்டூர் டி.கே.ஆர். சமர்ப்பா குழுவினரின் இசை நிகழ்ச்சி மற்றும், காவை. இளவசரனின் ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சியுடன் பொதுக் கூட்டம் தொடங்கியது.

‘சுதந்திர இந்தியாவும், சாதித் தீண்டாமையும்’ என்ற தலைப்பில் நடந்த கூட்டத்துக்கு கழக ஒன்றிய அமைப்பாளர் தி.குமார் வரவேற்புரையாற்றினார். எம். வின்முரசு, வி.கே.சின்னசாமி முன்னிலை வகித்தனர். மாவட்ட அமைப்பாளர் ஆர்.கண்ணன் தலைமை தாங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் முனி. ஆறுமுகம், தலைமைக் கழகப் பேச்சாளர் நங்கவள்ளி அன்பு, ஆகியோரைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். கோ. ஆனந்தன் நன்றி கூறினார். ஆர். கண்ணன் இல்லத்தார் தோழர்களுக்கு இரவு உணவு வழங்கினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, திராவிடர் கழகம் ஆகிய அமைப்புகளிலிருந்து விலகி, தோழர்கள், பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்து அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

தோழர் வின்முரசு, பிரேம்குமார், இரணியன், வெங்கடேசன், மனோஜ்குமார், கிருட்டிணகிரி குமரன், ஜோலார்பேட்டை குயில்தாசன், பாண்டவர்குட்டை சுப்பிரமணி உள்ளிட்டவர்கள் சுமார் 200 பேர் கலந்து கொண்டனர்.

## சேவூரில், பெரியார்–அம்பேத்கர் பிறந்த நாள் விழா

19.5.2008 திங்கள் மாலை 7 மணியளவில் சேவூரில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டத்திற்கு கனகராசு தலைமை வகித்தார். தோழர் செல்வம், கோபால், ரங்கசாமி முன்னிலை வகித்தனர். மாவட்ட அமைப் பாளர் சதுமுகை பழனிச்சாமி, மாவட்ட இளைஞரணி செய லாளர் புதுரோடு சிதம்பரம், திருப்பூர் மாவட்டத் தலைவர் துரைசாமி, ஈரோடு மாவட்ட செயலாளர் இராம. இளங் கோவன், தலைமைக் கழகப் பேச்சாளர் கா.சு.வேலுச்சாமி கியோர் பேசிய பின்னர் இறுதியாக சிற்பி இராசன், ‘மந்திரமல்ல, தந்திரமே!’ என்ற நிகழ்ச்சியை இரவு 10.30 மணி வரை செய்தும், விளக்கவுரை ஆற்றியும் நிறைவு செய்தார். இறுதியாக கிளாகுளம் கிளைச் செயலாளர் செந்தில்குமார் நன்றியுரை ஆற்றினார். ஏராளமான இளைஞர்கள், பொதுக்மக்கள் கூட்டம் முடியும் வரை திரண்டு இருந்தனர். மிகவும் சிறப்பாக இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு செந்தில்குமார், கிளாகுளம் தோழர்கள் மிகவும் கடுமையாக உழைத்து சிறப்பாக நடத்தினர்.



## கழக புகைப்படக் கலைஞர் கோ. வெங்கடேசன் பொள்ளாச்சியில் முடிவெய்தினார்


திராவிடர் கழகம், தமிழ்நாடு திராவிடர் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், பெரியார் திராவிடர் கழகம் என கழகத்தோடு 25 ஆண்டுகால தொடர்புடையவரும், பொள்ளாச்சி, உடுமலை, கோவை, ஆனைமலைப் பகுதிகளில் நடைபெறும் கழகக் கூட்டங்கள், போராட்டங்கள், பயிற்சி முகாம்கள் என கழகத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று அவற்றை அழகிய நிழற்படங்களாய் பதிவு செய்த புகைப்படக்கலைஞருமான கோ. வெங்கடேசன் அவர்கள் கடந்த 03.06.2008 காலை 11 மணி அளவில் பொள்ளாச்சியில் மாரடைப்பால் முடிவெய்தினார்.

கழக தலைமை செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, இரா.மனோகரன் மற்றும் பொள்ளாச்சி ஆனைமலை பகுதி கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினர். கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் கழகத்தின் சார்பில் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 12th June 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஜூன் 19, 2008 புரட்சி 7 முழக்கம் 25 விலை : ரூ.2.50

## மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசுக்கு பாராட்டு!

# “பெரியார் லட்சியங்களுக்காக - 60 ஆண்டுகாலம் பல்வேறு தளங்களில் உழைத்தவர்”

*சென்னையில் ஜூன் 14, 2008 அன்று கழகத்தின் மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசுக்கு பாராட்டு விழாவும், நாத்திகர் விழாவும் எழுச்சியுடன் நடந்தது. ஆயிரக் கணக்கான கழகத் தோழர்களும், பொது மக்களும் விழாவில் பங் கேற்றனர்.*



மாலை 6 மணியளவில் எம்.ஜி.ஆர். நகரில், கழக சார்பில் நடிகவேள் எம்.ஆர். ராதா நினைவாக நிறுவப்பட்ட நிழல் கொடையை நடிகவேள் எம்.ஆர். ராதா மகனும், தென்னிந்திய நடிகர் சங்கப் பொதுச் செயலாளருமான ராதாரவி திறந்து வைத்தார். முன்னதாக கழகத் தோழர் களின் பறை முழக்க நிகழ்ச்சி நடை பெற்றது. கழகத் தோழர்கள், பொது மக்கள் சூழ்ந்து நிற்க, ராதாரவி நிழற் குடையைத் திறந்து வைத்து பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சிகளைப் பாராட்டினார். “இந்தக் கழகக் குடும்பத்தில் நானும் ஒரு அங்கம். பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் எந்த நேரத்திலும் என்னிடம் தொடர்பு கொள்ளலாம். இந்த கழகத்திற்கு உதவிட நான் காத்திருக்கிறேன். இந்தக் கழகம் வளர வேண்டும்என்று நாம் விரும்புகிறேன்” என்று உணர்ச்சிப்பூர்வமாக குறிப்பிட்டார். நிழற் கொடை முகப்பில் நடிகவேள் எம்.ஆர்.ராதா படத்துடன் நடிகவேள் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

நிழற்குடை திறப்பைத் தொடர்ந்து தீமிதி நிகழ்ச்சி தொடங்கியது. தீமிதியைப் பார்வையிட ஏராளமான பொது மக்கள் திரண்டிருந்தனர். பறை முழக்கம் - கடவுள் மறுப்பு முழக்கங்களோடு தோழர்கள் தீக்குழியில் இறங்கியதைப் பொது மக்கள் பார்த்தனர். தோழர்கள் கோழிக்கறியை கடித்து சாப்பிட்டுக் கொண்டும், கைகளில் செருப்பை எடுத்துக் கொண்டும், கடவுள் இல்லை; இல்லவே இல்லை; பக்திக்கும் தீமிதிக்கும் தொடர்பில்லை என்ற முழக்கங்களோடு தீயில் இறங்கிக் காட்டினர்.

கழகத் தோழர்கள் வாயில் அலகுகளைக் குத்தி, அலகு குத்தலுக்கும் பக்திக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று பொது மக்களிடம் விளக்கினர். அங்கிருந்து எம்.ஜி.ஆர். நகரில் நாத்திகர்விழா நடைபெறும் இடத்துக்கு தோழர்கள் சென்றனர். சமர்ப்பா குழுவினரின் எழுச்சி இசையோடு நிகழ்ச்சிகள் தொடங்கின. மேடைக்கு எதிரே பறக்கும் நிலையில் முதுகில் அலகு குத்தி பறவைபோல் தோழர்கள் இரும்புத் தூணில் தொங்கி, சுழன்று காட்டினர். அப்போது - கடவுள் மறுப்பு முழக்கங்களை கூடியிருந்த தோழர்கள் எழுப்பினர்.

தோழர் கரு. அண்ணாமலை வரவேற்க, தோழர் அன்பு. தனசேகர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். வழக்கறிஞர் அமர்நாத், தோழர் கேசவன், வழக்கறிஞர் இளங்கோ, தோழியர் பாரதி, பொதுச் செயலாளர்கள் விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன், திரவரங்கம் பெரியார் சிலை அமைப்புக் குழுத் தலைவர் டாக்டர் முத்து, மூத்த பெரியார் தொண்டர் திருச்சி வீ.அ. பழனி, விழாவின் தலைவர், கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லக்கண்ணு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து, மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு ஏற்புரை நிகழ்த்தினார்.

கழகத்தின் நாத்திகர் விழாவுக்கு தடை விதிக்க வேண் டும் என்று இந்து முன்னணி ராமகோபாலன் உள்ளிட்ட மதவெறி சக்திகள், காவல்துறையிடம் வற்புறுத்தி வந்த நிலையில், சென்னை மாநகர காவல்துறை, நாத்திகர் பேரணிக்கு அனுமதி மறுத்தது. தீ மிதிப்பது, அலகு குத்துதல் மற்றும் நாத்திக பிரச்சாரத் துக்கே தடை செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி, இந்து முன்னணியைச் சார்ந்த சிலர், நடிகவேள் எம்.ஆர். ராதா நினைவு நிழற்குடை அருகே மறியல் செய்ய வந்தபோது, காவல் துறையினர் அவர்களைத் தடுத்து கைது செய்தனர்.

பக்தியின் பெயரால் மக்களிடம் அறிவியலுக்கு எதிரான மூடநம்பிக்கைகள் பரப்பப்படும் போது, அதை எதிர்த்து அறிவியல் கருத்துகளை முன் வைத்து, பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வதை எதிர்க்கலாமா? இது அரசியல்சட்டம் வழங் கியுள்ள கருத்துரிமை என்று, கழகத் தோழர் கள் விழாவில் பேசுகை யில் குறிப்பிட்டனர்.

**கோவை இராமகிருட்டிணன்**

கோவை இராம கிருட்டிணன் இது பற்றி குறிப்பிடுகையில் ‘இந்து முன்னணி’ என்ற பெயரில் நமது பார்ப்பனரல்லாத சமுதாயத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட பிற் படுத்தப்பட்ட சமுதா யத்து தோழர்களையே பெரியார் இயக்கத் துக்கு எதிராக பார்ப் பான், களத்தில் இறக்கி போராடச் சொல் கிறான். பார்ப்பனர்கள் நேரடியாக களத்துக்கு வருவதில்லை. இதை இந்து முன்னணியில் உள்ள பார்ப்பனரல்லாத தோழர்கள் சிந்திக்க வேண்டும். சென்னை அய்.அய்.டி.யிலே பார்ப்பனர்கள் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளைப் பறித்தபோது, அவர்களுக்காக பெரியார் திராவிடர் கழகம் தான், போராடியது. இவர்கள் இந்துக்கள் என்பதற்காக, இராம கோபாலனோ, இல. கணேசன்களோ, அய்.அய்.டி. பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து குரல் கொடுத்தார்களா? இந்து அறநிலையத் துறையிலேயே கோயில் ஊழியர்கள் பணிக்கு, பெண்கள் விண்ணப்பிக்கக்கூடாது என்று, தமிழ்நாடு தேர்வாணையம் விளம்பரம் செய்தபோது, பெரியார் திராவிடர் கழகம் சார்பில், எங்கள் வழக்கறிஞர் எஸ்.துரைசாமி தான், உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வெற்றி பெற்றார். இந்து பெண்களும் கோயில் ஊழியர்களாக உரிமை உண்டு என்று, உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இங்கே பாதிக்கப்பட்ட இந்துப் பெண்களுக்காக, குரல் கொடுத்தது பெரியார் திராவிடர் கழகம் தானே தவிர, இந்து முன்னணி குரல் கொடுத்ததா? கோயில் கர்ப்பக்கிரகத்தில், இந்து பிற்படுத்தப்பட்டவனும், இந்து தாழ்த்தப்பட்டவனும் நுழைந்தால் சாமியே தீட்டாகி விடும் என்று இந்து பார்ப்பனர்கள் காலம்காலமாக நிலை நிறுத்தி வந்த இழிவை எதிர்த்து போராடியது யார்? காஞ்சிபுரத்திலே கருவறை நுழைவு போராட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் தானே நடத்தியது? இந்து முன்னணி தோழர்களே! உங்களின் நண்பர்கள் யார்? எதிரிகள் யார் என்பதை நீங்களே சிந்திக்க வேண்டும்? இந்து மதம் என்று ஒரு

2 ஆம் பக்கம்

## “பெரியாரியல் பேரொளி!”

*திருவாரூர் தங்கராசு அவர்களின் 60 ஆண்டுகாலத்துக்கும் மேலான பெரியார் லட்சியத் தொண்டை பெருமையுடன் நினைவு கூர்ந்து பெரியார் திராவிடர் கழகம் சார்பில் ‘பெரியாரியல் பேரொளி’ என்ற விருதை வழங்கி, விழாவில் சிறப்பிக்கப்பட்டது. விருதுக்கான நினைவுப் பரிசை மேடையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் ஆர். நல்லக்கண்ணு, கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், கழகத்தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் பலத்த கரவொலி களுக்கிடையே வழங்கினர். புதுவை மாநில பெரியார் திராவிடர் கழகம் சார்பில் தலைவர் லோகு. அய்யப்பன் நினைவுப் பரிசினை வழங்கினார். கோவை மாவட்டக் கழகம் சார்பில் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், சென்னை மாவட்டம் சார்பில் மாவட்ட தலைவர் தபசி குமரன், செயலாளர் உமாபதி ஆடைகளைப் போர்த்தினர்.*

## “பெரியாருக்கே சேரும்!”

*திருவாரூர் தங்கராசு தனது ஏற்புரையில் - “எனக்கு அளிக்கப்பட்ட பெருமை, சிறப்பு அனைத்தும் பெரியார் ஒருவருக்குத்தான் சேரும். பெரியாரின் கருத்துகளைத்தான் நான் அவரது எளிய தொண்டன் என்ற முறையில், என்னால் இயன்ற அளவில் பரப்பி வந்திருக்கிறேன். எனது பணியைப் பாராட்டி விழா எடுக்கும்போது, அரசு அலுவலர்கள், பணி ஓய்வு பெறும்போது விழா எடுப்பதுபோல், ஒரு வேளை, உனது பணி போதும் என்று கூறி விழா எடுக்கிறார்களோ என்றுகூட தோன்றுகிறது” என்று குறிப்பிட்டபோது, அருகில் இருந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘அப்படி நாங்கள் கருதவில்லை’ என்று கூறவே, ‘மகிழ்ச்சி எனது பணி தொடர வேண்டும் என்றே விரும்புகிறார்கள்’ என்று திருவாரூர் தங்கராசு கூறினார். அதை ஆதரிக்கும் வகையில் கூட்டத்தினர் பலத்த கரவொலி எழுப்பினர்.*

# மாநாடு போல் நடந்த நாத்திகர் விழா



முதல் பக்கத் தொடர்ச்சி

மதமில்லை; பார்ப்பன மதத்தையே இந்து மதம் என்று கூறி, நமது தலையில் சுமத்தி, பார்ப்பன ஆதிக்கத்துக்கு நம்மை பலிகடாவாக்குகிறான் பார்ப்பான் என்பதை புரிந்து கொள்ளுங்கள்" என்று எடுத்துரைத்தார்.

விடுதலை இராசேந்திரன் தனது உரையில் தமிழ் நாட்டில் பெரியார் நடத்திய பகுத்தறிவு இயக்கம் தான் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் சமூக மாற்றங்களுக்கும் அடித்தளமாக இருந்தது என்பதை எடுத்துக்காட்டி, இந்தப் பிரச்சாரம் முடக்கப்பட்டால், மீண்டும் பார்ப்பன ஆதிக்கமே திரும்பும் என்பதை தமிழக ஆட்சியாளர்கள் உணர வேண்டும் என்று எச்சரித்தார். "கடவுள் மறுப்பு பிரச்சாரம் பக்தர்களை புண்படுத்துகிறது" என்று கூறுவோரை கேட்கிறோம். நீங்கள் கடவுளை மறுக்கவே இல்லையா? நோய் வந்தால் அது கடவுள் கொடுத்தது என்று ஏற்றுக் கொள்கிறீர்களா? மருத்துவமனைக்கு போய் நோய்க்கு சிகிச்சை பெறுவதே கடவுள் தந்த நோயை எதிர்க்கும் - கடவுளுக்கு எதிரான செயல்தானே? உங்கள் வீட்டுப் பிரச்னை, சொத்துப் பிரச்னை, குடும்பப் பிரச்னைகளை யெல்லாம் கடவுள் தந்த பிரச்னையாக கருதி ஏற்றுக் கொள்கிறீர்களா? அல்லது பிரச்னைகளைத் தீர்க்க கடவுளிடம் கோரிக்கை வைக்காமல், அரசிடமும், காவல்துறையிடமும், நீதிமன்றத்திடமும் ஓடுவதே, கடவுள் தந்த பிரச்னையை எதிர்க்கும் கடவுள் மறுப்பு செயல் தானே! முஸ்லிம் மதத்தையும், கிறிஸ்துவ மதத்தையும் ஏன் எதிர்க்கவில்லை என்று எங்களிடம் கேட்பதற்கு பதிலாக, இந்த மதங்களை எல்லாம் ஏன் அனுமதித்தீர்கள் என்று நீங்கள் நம்பும் சர்வசக்தி உள்ள கடவுள்களிடம் கேட்க வேண்டியதுதானே? இந்த மதங்கள் வராமலே தடுப்பதற்கு, உங்கள் கடவுளுக்கு சக்தியில்லாமல் போய்விட்டதா? அப்படி சக்தியில்லை என்று நீங்கள் கருதிக் கொண்டு, எங்களை நீங்கள் எதிர்க்க வருவது, எதைக் காட்டுகிறது? நீங்களே, கடவுள் நம்பிக்கையை கைவிட்டு, கடவுளைப் புண்படுத்துகிறீர்கள் என்பதைத்தானே காட்டுகிறது? உலகின் ஒரே இந்து ஆட்சி நடந்த நேபாள நாட்டில் இந்து மன்னர் ஆட்சியை மக்கள் சக்தி ஒழித்து, ஜனநாயகத்தை நிலைநாட்டிவிட்டனரே. மக்கள் சக்தி பெரிதா? கடவுள் சக்தி பெரிதா? நேபாளத்துக்குப் போய் அந்த மக்களை எதிர்த்து 'இந்து விரோதிகள்' என்று கூறி, நீங்கள் போராடுவீர்களா?" என்று கேட்டார்.

### ஆர். நல்லக்கண்ணு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லக்கண்ணு, திருவாரூர் தங்கராசு அவர்களுக்கு ஆடை போர்த்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வாழ்த்துகளை தெரிவித்து உரையாற்றினார். "தமிழகம் முழுதும் சுற்றி சுற்றி பகுத்தறிவுப் பிரச்சாரத்தை மக்கள் மன்றத்துக்கு எடுத்துச் சென்ற தன்னலமற்ற தியாகி திருவாரூர் தங்கராசு அவர்களின் பாராட்டு விழாவில் கலந்து கொள்வது கடமையாகும் என்று கருதியே இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்துள்ளேன். சிலர் பேச்சாளர்களாக இருப்பார்கள்; சிலர் எழுத்தாளர்களாக இருப்பார்கள். ஆனால் நல்ல பேச்சாளர், நல்ல எழுத்தாளர் என்பதோடு, நல்ல நாடக ஆசிரியர் என்ற பன்முகச் சிறப்பு கொண்டவர் திருவாரூர் தங்கராசு. தன்னுடைய ஆற்றல்களையெல்லாம் அவர் வணிக நோக்கிற்காக பயன்படுத்தாமல் சமுதாயத் துக்காகப் பயன்படுத்தினார். இத்தகைய சுயநலமற்று வாழ்நாள் முழுதும் சமூகத்துக்கு உழைப்பவர்களுக்கு பாராட்டு விழாக்கள் நடத்தப்பட வேண்டியது அவசிய மாகும். அத்தகைய விழாவை எடுத்துள்ள பெரியார் திராவிடர் கழகத்தை நான் பாராட்டுகிறேன். திருவாரூர் தங்கராசு அவர்களுடன் எங்களுக்கு நெருக்கமான உறவும், மரியாதையும் உண்டு. தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் பிரச்சினைக்காக தொடர்ந்து போராடி வருவது எங்கள் இயக்கம். இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக அனைத்துக் கட்சி கூட்டங்கள் நடக்கும் போது, திருவாரூர் தங்கராசு அவர்கள் தொழிலாளர்கள், விவசாயிகள் உரிமைகளை அழுத்தமாக எடுத்துக் கூறி, எங்களுக்கு வலிமை சேர்த்துத் தருவார். அந்த வகையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு அவரிடம் நெருக்கம் உண்டு.

அவர் எழுதி நடிகவேள் எம்.ஆர். ராதா நடித்த ரத்தக் கண்ணீர் நாடகம் - தமிழகம் முழுதும் 3000-த்துக்கும் அதிகமாக மேடை ஏற்றப்பட்டுள்ளது. இவ்வளவு அதிக எண்ணிக்கையில் மேடை ஏற்றப்பட்ட நாடகம் ரத்தக் கண்ணீர் மட்டும் தான். இந்த நாடகம் அரங்கேற்றப்பட்ட காலத்தில் அதைப் பார்க்க எங்களுக்கு வாய்ப்பில்லை. அப்போது கம்யூனிஸ்ட் கட்சி, தடை செய்யப்பட்டு, நாங்கள் தலைமறைவாக இருந்த காலம். பிறகு - அது திரைப்படமாக வந்தபோது தான், நான் அதைப் பார்த்தேன். அந்த நாடகத்தில் கூறப்பட்ட கருத்துகள், இப்போதும் சமூகத்துக்கு தேவையான கருத்துகளே யாகும். இப்போதும் அந்த நாடகத்தை மேடை ஏற்ற முடியும். இன்றைக்கு சமுதாயத்துக்கு தேவையான கருத்துகளை இணைத்துக் கொண்டு, அந்த நாடகத்தை நடத்த முடியும். காலத்தின் தேவைக்கேற்ப நடத்தக்கூடிய யுக்திகளுடன், அந்த நாடகம் எழுதப்பட்டிருப்பது அதன் தனிச் சிறப்பாகும். இப்போது கன்னடத்தில், ரத்தக் கண்ணீர் திரைப்படமாக தயாரித்து வெற்றிகரமாக ஓடியிருக்கிறது என்ற செய்தியை, மேடையில் என்னிடம் திருவாரூர் தங்கராசு தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியினராகிய நாங்கள் நாத்திகர்கள் தான். ஆனால், மேடையில், நாத்திகப் பிரச்சாரம் செய்வது இல்லை. ஆனால், சமூகத்தில் கடவுளின் பெயரால் மக்களை ஏமாற்றும் கூட்டம் அதிகமாகி வருகிறது. அமெரிக்காவின் அதிபர் புஷ், கடவுள் மீதும், மதத்தின் மீதும் பக்தி கொண்டவர்தான். நமது நாட்டின் ரூபாய் நோட்டுகளில், 'I Promise to pay the bearer' என்றுதான் எழுதப்பட்டிருக் கும். ஆனால் அமெரிக்க டாலரில் 'Trust the God' (கடவுளை நம்பு) என்றுதான் அச்சிடப்பட்டிருக்கும். அந்த அமெரிக்க டாலர் தான் உலகம் முழுதும் கடவுள் பெயரால் சுரண்டலை நடத்துகிறது. கொள்ளை அடிக்கிறது. உலகின் தலைசிறந்த நாகரிகங்களில் ஒன்றான பாபிலோனியா நாகரிகம், செழித்து வளர்ந்த பூமிதான் ஈராக். அந்த ஈராக் மீது தான், அமெரிக்கா தனது படைகளை அனுப்பி ஆக்கிரமித்து, ஈராக் நாட்டையே சீரழித்தது. காரணம் - ஈராக் நாட்டின் அதிபர் சதாம் உசேன், அமெரிக்க டாலருக்கு பதிலாக அய்ரோப்பிய ஒன்றியங்களின் நாணய மான 'ஈரோ டாலருக்கு' பெட்ரோல் விற்பனையை மாற்றி யது தான், அமெரிக்காவின் மிரட்டலுக்கு பதிலடி தந்த காரணத்தால்தான், சதாம் உசேன் தூக்கிலிடப்பட்டார்.

நமது நாட்டில் - கடவுள், மூடநம்பிக்கைகள் - மக்கள் நலத் திட்டங்களையே முடக்கும் நிலைக்கு வந்து விட்டதைப் பார்க்கிறோம். 1860 இல் தொடங்கப்பட்ட திட்டம் சேது கால்வாய். இதே காலகட்டத்தில் தொடங்கப் பட்ட சூயஸ் கால்வாய் திட்டம், பனாமா கால்வாய் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் ராம கோபாலன், சுப்ரமணியசாமி, ஜெயலலிதா போன்றவர்கள் ராமன் பாலத்தை இடிக்கக் கூடாது என்று உச்சநீதி மன்றத் தில் வழக்கு தொடருகிறார்கள். பூமியையும், மலையையும், கடலையும்கூட தெய்வமாகத்தான் வணங்கு கிறார்கள். எனவே பூமியிலோ, மலையிலோ, கடலிலோ எந்தத் திட்டமும் தொடங்கக் கூடாது என்று கூறுவீர்களா என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கேட்டபோது, நாம் நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் நீதிமன்றத்தின் தீர்ப்பு வேறு விதமாக வந்து விட்டது.

ஆன்மீகத்தை நம்பிய வள்ளலார்கூட கடவுள் பெயரால் கற்பிக்கப்பட்ட மூடநம்பிக்கைகளை "கலை உரைத்த கற்பனைகள்" என்றார். அந்த மூடநம்பிக்கைதான் ரூ. 1000 கோடி செலவிலான மக்கள் திட்டத்தை தமிழகத்தில் முடக்கிப் போட்டிருக்கிறது. எனவே பகுத்தறிவு இயக்கம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று, தனது உரையில் குறிப்பிட்டார்.

### திருச்சி வீ.அ. பழனி

மூத்த பெரியார் தொண்டர் திருச்சி வீ.அ. பழனி பேசுகையில் திருவாரூர் தங்கராசு அவர்களின் பல்வேறு கொள்கைத் தொண்டுகளை நினைவு கூர்ந்தார். பெரியாரை எதிர்த்த பார்ப்பனர்களுக்கு சரியான பதிலடியை தந்தது. "ஈ.வெ.ரா. இறப்பதென்றோ" எனும் தலைப்பில் திருவாரூர் தங்கராசு அவர்கள், ஒரு வெளியீட்டைக் கொண்டு வந்தபோது திராவிடர் கழகத் தோழர்களே அத் தலைப்பைக் கண்டு முதலில் ஆத்திர மடைந்து, பிறகு தெளிவு பெற்றனர். 1947 ஆம் ஆண்டு முதல் நான் அவருடன் இணைந்து செயல்பட்டுள்ளேன். அவரது கொள்கை உறுதி எத்தகையது என்பது எனக்குத் தெரியும் அவர் 'நவீன லீலா' என்ற நாடகத்தை எழுதி நடித்தார். நானும் அந்த நாடகத்தில் நடித்தேன். கழகத் தோழர் லால்குடி முத்துச் செழியன் போன்றவர்கள் எல்லாம் அதில் நடித்தார்கள். மறைந்த டார்பிடோ ஏ.பி.ஜனார்த்தனம் அவர்கள் நடத்தி வந்த 'தோழன்' பத்திரிகைக்கு நிதி திரட்டுவதற்காக தஞ்சை நகரில் அந்த நாடகத்தை நடத்தினோம். சின்னாளப்பட்டியில், நாகர் கோயிலில், நன்னிலத்தில் கழக வளர்ச்சிக்கு நிதி திரட்ட திரு வாரூர் தங்கராசு அவர்கள் இந்த நாடகத்தை நடத்தினார்.

கிருஷ்ணகிரியில் திருவாரூர் தங்கராசு அவர்கள் பேசும்போது கூட்டத்தில் பெரும் கலவரத்தை உருவாக்கி தாக்கினார்கள். சலசலப்புக்கு அஞ்சாமல், திருவாரூர் தங்கராசு துணிவுடன் எதிர்கொண்டார். அப்போது அரசு வழக்கு தொடர்ந்தது. வழக்கு நடத்துவதற்காக, அய்யா பணம் தர முன் வந்தபோது, அதை திருவாரூர் தங்கராசு வாங்க மறுத்துவிட்டார். வழக்கறிஞர் இல்லாமல், தானே நீதிமன்றத்தில் வாதாடி, வழக்கில் வெற்றி பெற்றார். நடிகவேள் நடத்திய தூக்குமேடை நாடகத்தில், திருவாரூர் தங்கராசு அவர்களே வேடமேற்று நடித்தார். கி.ஆ.பெ.விசுவநாதன் தலைமையில் ரத்தக் கண்ணீர் நாடகம் அரங்கேற்றமானது. ஆரம்பத்தில், ரத்தக் கண்ணீர் நாடகத்திலேயே அதை எழுதிய திருவாரூர் தங்கராசு, நடிகவேள் ராதாவுடன் நடித்து வந்தார். 1970 ஆம் ஆண்டில் மயிலாடுதுறையில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் இராமாயணம் நாடகம் நடந்தது. அதில் திருவாரூர் தங்கராசு இராவணன் வேடமிட்டு நடித்தார். நான் ராமன் வேடமிட்டு நடித்தேன். எனது மகன் இந்திரஜித் வேடத்தில் நடித்தார். நாடகத்தை பெரியார் இரவு வெகுநேரம் விழித்திருந்து பார்த்தார். நாடகத்தைப் பாாத்துக் கொண்டிருந்தபோது பாதியிலேயே நேரமாகிவிட்டது புறப்படலாம் என்று அவருடனிருந்த "சிலர்" கூறியபோது பெரியார், போக மறுத்து இறுதி வரை நாடகத்தைப் பார்த்து, நாடகம் முடிந்தவுடன், நாடகத்தை பாராட்டி உரையாற்றினார்.

பெரியார் நாடகத்துக்கு தலைமை ஏற்று நிகழ்த்திய அந்த உரை முதலில் 'விடுதலை' நாளேட்டில் வெளியிடப் படவில்லை. ஏன் அதை வெளியிடவில்லை என்று பெரியாரே கேட்ட பிறகுதான், அது வெளியிடப்பட்டது. கீழப்பாவூர், உள்ளிக்கோட்டை, மன்னார்குடியில் நடந்த ராமாயணம் நாடகங்களில் திருவாரூர் தங்கராசு, ராவணன் வேடமிட்டு நடித்துள்ளார். எனவே, சிறந்த பேச்சாளராக, எழுத்தாளராக மட்டுமின்றி, நாடக நடிகராகவும் இருந்து பெரியார் கொள்கைகளைப் பரப்பியவர் திருவாரூர் தங்கராசு. இந்த விழாவில் நான் பங்கேற்றதற்காக பெருமைப் படுகிறேன்" என்று குறிப்பிட்டார். இந்த விழா நாத்திகர் விழாவாக நடப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடை கிறேன். இத்தகைய நாத்திகப் பகுத்தறிவுப் பிரச்சாரம் தான் தமிழகத்தில் தீவிரமாக நடத்தப்பட வேண்டும் என்பதே என் விருப்பம் என்று கூறி முடித்தார். இறுதியில் திருவாரூர் தங்கராசு 45 நிமிடம் ஏற்புரை நிகழ்த்தினார். இறுதி வரை கூட்டம் கலையாது, அவரது உரையை செவிமடுத்தது. மாவட்ட செயலாளர் உமாபதி நன்றி கூற இரவு 10.45 மணியளவில் நிகழ்ச்சி முடிவடைந்தது. விழாவுக்கு திருவாரூர் தங்கராசு அவர்களின் துணைவியார், மகள்கள், மருமகன், பேரன் மற்றும் மூத்த பெரியார் தொண்டர்கள் பலரும் வந்திருந்து சிறப்பித்தனர்.

கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பேராசிரி யர் புதுவை இராசேந்திரன் உள்ளிட்ட பல தோழர்கள் ஆடை போர்த்தி சிறப்பு செய்தனர். பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். இரவு 10.45 மணியளவில் நிகழ்ச்சி முடிவடையும் வரை, கூட்டத்தினர் அனைவரும் உரை களைக் கேட்டது கூட்டத்தின் தனிச் சிறப்பாக அமைந்தது. மாவட்ட செயலாளர் உமாபதி நன்றி கூற விழா நிறை வடைந்தது.

***திருவாரூர் தங்கராசு ஏற்புரை அடுத்த இதழில்.***

# ‘இந்து’ மயமாகும் காவல்நிலையங்களை எதிர்த்துப் போராட்டம்: கழக செயற்குழு முடிவு

15.6. 2008 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை கோடம்பாக்கம் கணேஷ் மகாலில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பெரியார் திராவிடர் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் கூடியது. கழகப் பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், செயற்குழு உறுப்பினர் சி.அம்புரோசு, பால் பிரபாகரன் - தூத்துக்குடி; துரை. சம்பத், க.சூ.இரவணா - திண்டுக்கல்; செ.த. இராசேந்திரன் - திருச்சி; இரா. டேவிட், செ.மார்ட்டின், மேட்டூர்கி.முல்லைவேந்தன் - சேலம்; ந. பிரகாஷ் - கோவை தெற்கு; ந. அய்யனார் - விழுப்புரம்; கா.நாத்திகசோதி - ஈரோடு; இலட்சுமணன் - பெரம்பலூர்; மா.மாயாண்டி - மதுரை; எ.கேசவன், தபசி. குமரன் - சென்னை ஆகியோர் கருத்துகளைத் தெரிவித்தனர். வருகை புரிந்து கருத்துகளைத் தெரிவித்த கழகப் பொறுப்பாளர்களின் விவரம்: வழக்கறிஞர் வை.இளங்கோவன், தி. தாமரைக் கண்ணன், கை வண்டி கருப்பு, ம.ரே. ராசுக்குமார், எம்.பாண்டியன், தங்கம், இரா. உமாபதி, சி. இராவணன், து.சுப்ரமணி, அன்பு தனசேகர், ப. திலீபன்.

காலை முதல் மாலை 6 மணி வரை தொடர்ந்து கழகத்தின் செயல்திட்டங்கள் பற்றி கலந்துரையாடப் பட்டது. கூட்டத்தின் இறுதியில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) தமிழகத்தில் மிகப் பெரிய சமுதாய விழிப் புணர்வை ஊட்டிய ‘குடி அரசு’ இதழில் பதிவாகியுள்ள பெரியாரின் எழுத்துகளையும், பேச்சுகளையும் தொகுத்து, இதழ் தொடங்கப்பட்ட 1925 மே மாதம் முதல் 1938 முடிய உள்ள சுயமரியாதை இயக்கக் காலம் முழுவதையும் சுமார் 400 பக்கங்களாகக் கொண்ட 27 தொகுதிகளாக எதிர்வரும் பெரியார் பிறந்த நாளில் (17.9.2008) வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளதை பெரு மகிழ்வுடன் வரவேற்ற செயற்குழு, மாவட்ட கழகத் தோழர்கள் அதன் முன் வெளியீட்டுத் திட்டத்தில் முழு முனைப்புடன் ஈடுபடுத்திக் கொண்டு, பெரியார் சிந்தனைகளை தமிழ்நாடு முழுதும், நாட்டு எல்லைகளைக் கடந்தும் பரப்புவதில் உற்சாகத்துடன் செயல்படுவது என முடிவெடுக்கப்பட்டது.

2) பெரியார் திராவிடர் கழகத்தின் முன்னணி அமைப்பான தமிழ்நாடு மாணவர் கழகத்தின் மாநில அமைப்பாளர்களான கோவை பன்னீர் செல்வம், மதுரை அகராதி, மயிலாடுதுறை இளைய ராஜா ஆகியோர் அமைப்பு பணிகளுக்காக ஜூலை மாத தொடக்கத்தில் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்ய உள்ளனர். மாவட்ட கழகப் பொறுப்பாளர்களும், முன்னணி தோழர்களும் அவர்களுக்கு கழக மாணவர்களை அறிமுகப்படுத்தியும், பகுதிகளில் நிலவுகிற கல்வி நிலையங்கள் குறித்தான சிக்கல்களைத் தொகுத்து அளித்தும் அவர்களது அமைப்புப் பணிகளுக்கு ஊக்கம் அளிப்பது என முடிவெடுக்கப்பட்டது.

3) 80 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாடு முழுவதும் பகுத்தறிவு சாதி ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்புக் கருத்துக்கள் பெரியார் அவர்களது காலத்திலிருந்து தங்குதடையற்று நடந்து வந்த நிலைக்கு மாறாக சென்னை மாநகரில் கடந்த இரண்டு ஆண்டுகளாகவும், கோவை மாநகரில் சில ஆண்டுகளாகவும் காவல்துறையிடம் அனுமதிக்கு அணுகும்போது, வெகு சிலரின் எதிர்ப்புக்குப் பணிந்து மூட நம்பிக்கை ஊர்வலங்களுக்கும், சில வேளைகளில் மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சிகளுக்கும், பொது கூட்டங் களுக்கும் அனுமதி மறுப்பது வழக்கமாகிவிட்டது.

அதே வேளை, மதச் சார்பற்ற அரசு அலுவலகங்களில் குறிப்பாக காவல் நிலையங்களில் கடவுள் படங்களை வைப்பதும், இந்துமத பூஜைகள் நடத்து வதும், புதிய கோயில்கள் கட்டுவதும் - அரசு விழாக் களில்கூட பூமி பூஜை, யாகம் என நடைபெறுவதும், (அரசியல் சட்டம் வழிகாட்டும் அறிவியல் மனப் பான்மை, ஆய்வு மனப்பான்மை வளர்த்தல் ஆகியவற்றுக்கு முரணாகவும்) இயல்பாகிப் போய்விட்டது.

மாணவர்களின் கல்வியைக் குலைக்கும் வகையில் அரையாண்டு தேர்வின்போது அய்யப்பன் பேராலும், இறுதியாண்டு தேர்வின்போது மாரியம்மன், காளியம்மன் பேராலும் இரவு முழுவதும் ஒலி பெருக்கி வைத்தும் திருவிழாக்களின் பேரால் இரவு முழுவதும் மேளம் அடித்தும், உச்சநீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிராக காவல்துறை அனுமதிப்பதும் தங்குதடையின்றி நடைபெற்று வருகிறது.

எனவே, அவ்வாறான நிகழ்வுகளின்போது உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை சுட்டிக்காட்டி மனுக்கள் கொடுத்தும், உயர் அதிகாரிகளுக்கு நகல்கள் அனுப்பியும் நமது எதிர்ப்புகளைப் பதிவு செய்ய வேண்டுமெனவும், உரிய பலன் இல்லாமற் போகுமானால் ஆயுத பூஜை போன்ற ஏதேனும் ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து தமிழ்நாடு முழுவதும் அரசு அலுவலகங்களுக்குள் குறிப்பாக காவல்துறை அலுவலகங்களுக்குள் நுழைந்து அத்தகைய சட்டவிரோத செயல்களைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனவும் முடிவெடுக்கப் பட்டது.

4) பெரியார் திராவிடர் கழகத்தின் முன்னணி அமைப்பாக தமிழர் கலை இலக்கிய மன்றம் தொடங்க முன்பு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அதை புதுப்பித்து சிறப்பாக இயங்க வைக்கும் முயற்சியாக, அவ்வமைப்பின் பெயர், செயல் வரைமுறை, அமைப்பு வடிவம் போன்றவற்றை கலந்தாலோசித்து விரிவான அறிக்கை தயாரிக்கும் பணிக்கு கீழ்க்கண்ட தோழர்கள் அறிவிக்கப்பட்டார்கள். திருப்பூர் இராவணன், தாராபுரம் குமார், செம்பட்டி இராசா, பொள்ளாச்சி கா.சு.நாகராசு, சேலம் கொளத்தூர் செல் வேந்திரன், புதுவை மா. இளங்கோ, காரைக்கால் சரவணன். ஆகியோர் குழு உறுப்பினர்களாக செயல்படுவர்.

மேற்குறிப்பிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

## சென்னை நாத்திகர் விழா






PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ஆய்வில் வெளிவந்த தகவல்: அறிவாளிகளுக்கு கடவுள் நம்பிக்கை குறைகிறது

சாதாரண மக்களுடன் ஒப்பிடுகையில் அறிவாளிகளுக்கு இறை நம்பிக்கை குறைவாக உள்ளதாக, லண்டன் அல்ஸ்டெர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். சமீபத்தில் தாங்கள் நடத்திய ஆய்வின் மூலம் இது தெரிய வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அதிலும் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் அறிஞர்களுக்கு இறை நம்பிக்கை மிக மிகக் குறைவு. தாங்கள் புத்திக் கூர்மையோடு திகழ்வதற்கு தங்களது திறனே காரணம். இதற்கு வேறு காரணம் எதுவும் இல்லை என்றே பெரும்பாலான பிரிட்டன் பல்கலைக்கழக பேராசிரியர்கள் உறுதியாகத் தெரிவிக்கின்றனர்.

பிரிட்டினில் ஆரம்பக் கல்வி பயில்பவர்கள் மத்தியில் இறை நம்பிக்கை அதிகம் உள்ளது. அவர்கள் வளர்ந்து அறிவு முதிர்ச்சிப் பெறப்பெற அவர்கள் மத்தியில் இறை நம்பிக்கை மெதுவாக குறைய ஆரம்பித்து விடுகிறது. அந்த வகையில் 20-ம் நூற்றாண்டில் 137 வளரும் நாடுகளில் மக்கள் மத்தியில் சமய நம்பிக்கை குறைந்து வருகிறது. மக்கள் அறிவாளிகளாக மாறி வருவதே இதற்குக் காரணம்.

பிரிட்டனில் 3.3 சதவீதம் பேர்தான் இறை நம்பிக்கை உள்ளதாக தெரிவித்தனர். 68.5 சதவீதம் பேர் தங்கள் மீதான நம்பிக்கை தவிர்த்து வேறெந்த நம்பிக்கையும் இல்லை என தெரிவித்ததாக இந்த ஆராய்ச்சிக் குழுவில் இடம் பெற்ற பேராசிரியர் ரிச்சர்டு லைன் தெரிவித்தார்.

**நன்றி : 'தினமணி' 13.6.2008**
**வெளியீடு : பெரியார் திராவிடர் கழகம், கோவை**

## செப்.17 இல் – 27 தொகுதிகள்
## 'குடிஅரசு' முன்பதிவுத் திட்டம்

1925 முதல் 1938 முடிய சுயமரியாதை இயக்கக் காலம் முழுவதும் தொகுக்கப்பட்டு 27 தொகுதிகளாக, வெளிவர இருக்கின்றன.

ஒவ்வொரு தொகுதியும் 400 பக்கங்களுக்கு மேல்!

ரூ.5400 விலையுள்ள இத் தொகுதிகள் முன் பதிவு திட்டத்தின் கீழ் ரூ.3500-க்கே உங்களுக்கு கிடைக்கும்.

ரூ.3500 முன் பணம் அனுப்பி, முன் பதிவு செய்து கொள்ள வேண்டிய கடைசி தேதி, ஆகஸ்ட் 31.

வரைவோலையாகவோ (டிராப்ட்), பணவிடை வழியாகவோ (மணியார்டர்) மட்டும் அனுப்ப வேண்டும். காசோலைகள் (செக்) அனுப்ப வேண்டாம்.

பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஆம் தேதி - 27 தொகுதிகளும் வெளி வருகின்றன.

ஒவ்வொரு தமிழர் இல்லத்திலும் இடம் பெற வேண்டிய அரிய தொகுப்பு!

ஏற்கனவே கழகத்தால் வெளியிடப்பட்ட மூன்று தொகுதிகளும், பல புதிய சேர்க்கைகளோடு, கூடுதல் பக்கங்களில் இப்போது, இத் தொகுதிகளோடு இணைத்து, மீண்டும் வெளியிடப்படுகிறது.

முன்பணம் செலுத்தி, உங்கள் தொகுதிளை உறுதி செய்து கொள்ளுங்கள்!

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தா.செ.மணி**, பெரியார் படிப்பகம், மேட்டூர் அணை-1,
சேலம் மாவட்டம்-636 401

வரைவோலையாகவோ (D.D.), பணவிடையாகவோ (எம்.ஓ.) அனுப்பலாம். **'T.S. MANI'** என்ற பெயரில் வரைவோலை எடுக்க வேண்டும். மேட்டூர் அணையில் மாற்றத்தக்க வங்கி வரைவோலைகளாக இருத்தல் வேண்டும். காசோலை (Cheque) ஏற்க இயலாது.

**– பெரியார் திராவிடர் கழகம்**

## பிறந்த நாள் நன்கொடைகள்

சென்னை இராயப்பேட்டை கழகச் செயல்வீரர் அ.இராசா - ரா.புஷ்பலதா ஆகியோரின் மகன் ரா.முகிலன் - முதலாம் ஆண்டு பிறந்த நாள் 10.6.2008 செவ்வாய் மாலை 6 மணியளவில் திருவல்லிக்கேணி, லாயிட்ஸ் சாலையிலுள்ள முருகேசன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் சு.குமாரதேவன், அன்பு தனசேகர், எ.கேசவன், தபசி குமரன், இரா.உமாபதி மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். "புரட்சி பெரியார் முழக்கம்" வளர்ச்சி நிதியாக ரூ.500 அளிக்கப்பட்டது.

சென்னை அயன்புரம் கழக தோழர் நா.தினகரன் - மோ.ஜெயந்தி இணையருக்கு 11.6.2008 அன்று காலை ஆண் குழந்தை பிறந்ததை முன்னிட்டு 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதியாக ரூ.500 அளித்துள்ளார்.

சென்னை எம்.ஜி.ஆர். நகரில் 14.6.2008 அன்று நடந்த நாத்திகர் விழாவில் மூவேந்தன் - ஜெயசீலி இணையரின் மகளுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் "நற்றமிழ்" என பெயர் சூட்டினார். 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதியாக ரூ.100 அளித்தனர்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

# கடவுளை ஏன் எதிர்க்கிறோம்?

முதலில் சாதி வித்தியாசம் என்கிற கொடுமைத் தன்மை என்பது இந்த நாட்டைவிட்டு ஒழிய வேண்டுமா, வேண்டாமா என்ற முடிவு தெரிந்துவிட வேண்டும். இரண்டாவதாக, ஒரு மனிதனுக்குக் கீழோ, மேலோ சாதி என்பது ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்தாக வேண்டும். அதற்கு மேல், சாதி வித்தியாசத்திற்கு ஆதாரமாயுள்ளவைகளை அடியோடு அழிக்க முயல வேண்டும். அப்படிச் செய்யாமல், உயர்வு தாழ்வைப் போக்கிவிடலாமென்று கருதுதல் நுனிமரத்தில் நின்று கொண்டு அடிமரத்தை வெட்டுகிற மனிதனின் முட்டாள் செய்கையையே ஒக்கும். சாதி ஆசாரம் என்பவை மதம் என்னும் மரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. சாதியை மதத்திலிருந்து பிரித்துத் தள்ள வேண்டும். இப்படிப் பிரிப்பதற்கு முடியாத வரையில் சாதியும் மதமும் ஒன்றோடொன்று இறுகப் பின்னிக் கொண்டிருக்குமேயானால் அந்த இரண்டையும் வீழ்த்தியேயாக வேண்டும். முன்னிருந்த அந்த உயர்ந்த சாதிக் கபடர்கள் அவ்வளவு தந்திரமாக ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத வகையில் சாதியையும், மதத்தையும் பிணைத்துப் பின்னிக் கொண்டிருக்கும்படி இறுகக் கட்டி வைத்திருக்கிறார்கள். ஆகையால் சாதியை அழிக்கத் தலைப்படுகையில் மதமும் வெட்டப்படுகிறதே என்று பயப்படாமல் சாதி மரத்தையும், மத மரத்தையும் சேர்த்து நெருப்பு வைத்துச் சாம்பலாக்க வேண்டியது தடுக்க முடியாத அவசியமாகும். இதிலும் ஒரு சங்கடம் இருக்கிறது. அதாவது, மதமானது வேதம், புராணம் என்பவைகளுடன் கட்டிப் பிணைக்கப்பட்டிருக்கிறது.

ஆதலால், இந்த வேதம், புராணங்களிலிருந்து மதத்தைப் பிரிக்க வேண்டும். இதிலும் பிரிக்க முடியாதபடி கட்டு பலமாக இருந்தால், இங்கும் இரண்டையும் சேர்த்து நெருப்பு வைக்க வேண்டியதுதான். ஆனால் இந்த வேதம், கடவுளுடன் சேர்த்துக் கட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இதிலும் பிரிக்க முடியாத பிணைப்பு இருந்தால் அந்தக் கடவுள் என்பதன் தலையிலும் கை வைத்துத்தான் ஆக வேண்டியிருக்கிறது. வேதத்தை இழுத்தால் கடவுளுக்கும் அசைவுதான் கொடுக்கும். இதில்தான் பெருத்த சங்கடப்படக்கூடும். கடவுளை அசைப்பதா என்று பயப்படக் கூடாது. எனவே சாதி, மதம், வேதம், கடவுள் எல்லாவற்றையும் ஒழித்துத்தான் ஆக வேண்டும். இவற்றில் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து வராது. இப்படி நாம் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாமல் எல்லாவற்றையும் சேர்த்துக் கொளுத்தும்போது, உண்மையில் ஏதாவது சத்து இருந்தால் அது அழியாது. இப்படி நாம் சாதி வித்தியாசத்தை ஒழிக்க முற்படுகையில் மதமென்பதும் ஒழிந்து போகுமேயென்றால் அந்த மதம் நமக்கு வேண்டாம். அது இப்போதே அழிந்து போகட்டும். மதத்தைப் பொசுக்கும்போது வேதமும் பொசுங்கிப் போவதாயிருந்தால் அந்த வேதம் என்பது இப்போதே வெந்து போகட்டும். வேதத்தை ஓட்டும்போது கடவுளும் ஓடிவிடுவாரென்றால் அந்தக் கடவுள் என்பதும் இந்த நிமிஷத்திலேயே ஓடிவிடட்டும். அப்பேர்ப்பட்ட கடவுள் நமக்கு வேண்டவே வேண்டாம்.

**– பெரியார் (2.10.1929 'திராவிடன்')**

## சங்கராபுரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்




7.6.2008 மாலை 4 மணியளவில் விழுப்புரம் மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம் சார்பாக சின்ன சேலம் முதல் கள்ளக்குறிச்சி வரை அமைய வுள்ள ரயில் பாதையை, சின்னசேலம்-கள்ளக்குறிச்சி-சங்கரா புரம்-மூங்கில் துறைப் பட்டு வழியாக திருவண்ணாமலை ரயில் நிலைய சந்திப்பு வரை நீட்டிக்கக் கோரி மத்திய அரசு மற்றும் ரயில்வே அமைச் சகத்தை வலியுறுத்தும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட அமைப் பாளர் சி. சாமிதுரை முன்னிலை வகிக்க மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் ப. கண்ணன் தலைமையேற்க, மாவட்ட செய லாளர் மு.வ. நடராசன், ந.அய்யனார் ஆகியோர் கருத்துரை வழங்கினர். சின்ன சேலம்-கள்ளக்குறிச்சி-காரனூர்-சங்கரா புரம்-மூங்கில் துறைபட்டு-திருவண்ணா மலை வரை ரயில் பாதையை அமைத்தல்.


இப்பகுதி வாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேறுவதுடன் விவ சாயிகள், மலைவாழ் மக்கள் பயனடை வதுடன் நெல் அரிசி ஆலைகள் மற்றும் இந்த வழி தடத்தில் அமைந்துள்ள சக்கரா பாளையம் சர்க்கரை ஆலை மற்றும் மூங்கில் துறைப்பட்டு சர்க்கரை ஆலை களில் உற்பத்தியாகும் சர்க்கரைகள் ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக இருக்கும்.

மு.வ. செல்வராசு, செ. பிரபு, க. கோவிந் தன், இளையராசா, மு.ராசா, மா. அன் பழகன், மா. குமார், கல்லை ஆசைத்தம்பி, பாலன் உள்பட பல பகுதிகளிலிருந்தும் ஐம்பதுக்கு மேற்பட்ட தோழர்கள் ஆர்ப் பாட்டத்தில் பங்கேற்றனர். ரவி வர்மா ஒளி ஒலி அமைத்து தந்தார். அ. முருகன் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 19th June 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2039 | ஜூன் 26, 2008 | புரட்சி 7 | முழக்கம் 26 | விலை : ரூ.2.50


### பெரியார் – அண்ணா – எம்.ஆர்.இராதா வழியில்

# இராமாயண எதிர்ப்பு பிரச்சாரம் தீவிரமாக நடத்தப்பட வேண்டும்

### மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு வலியுறுத்தல்

*பெரியார் – அண்ணா – நடிகவேள் எம்.ஆர். இராதா காட்டிய வழியில் இராமாயண எதிர்ப்பு பிரச்சாரம் தீவிரமாக நடக்க வேண்டும் என்று வற்புறுத்திய திருவாரூர் தங்கராசு அவர்கள், இராவணனைக் கொல்வதற்காகவே, விஷ்ணு ராமன் அவதாரமெடுத்து வந்தான் என்பதற்கு இராமாயணத்திலே ஏராளமான சான்றுகள் உண்டு என்றார். இராமாயணம் பற்றி 60 ஆண்டுகாலம் தான் எழுப்பிய கேள்விகளுக்கு ஒரு பார்ப்பானிடமிருந்தும் பதில் வரவில்லை என்று மேலும் குறிப்பிட்டார்.*

*14.6.2008 அன்று சென்னை கலைஞர் கருணாநிதி சாலை, எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் நடைபெற்ற கழகத்தின் மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசுக்கு - 'பெரியாரியல் பேரொளி' எனும் விருதை வழங்கி கழகம் சிறப்பித்தது. அதில் கழகத்தின் மூத்த தலைவர் திருவாரூர் கே. தங்கராசு கலந்து கொண்டு ஆற்றிய ஏற்புரை:*

எனக்குக் கிடைத்த பெருமையெல்லாம் பெரியாரையே சாரும். அவருடைய கருத்துக்களை என்னால் இயன்ற அளவு மக்களிடையே ஒரு 60 ஆண்டுகளுக்கு மேலாக பரப்பி வருகின்றேன். அவருடைய தொண்டர்களிலே ஒரு சிறிய தொண்டனாக இன்னமும் இருந்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

உங்களுடைய அலுவலகத்திலே நீண்ட காலம் பணியாற்றிய பிறகு உனது பணி போதும் இத்தோடு நிறுத்திக் கொள் என்று பிரிவு உபசரிப்பாக நிகழ்ச்சி நடத்துவார்களே அது போன்று எண்ணி இவ்வளவு ஆடம்பரமும் பெருமைகளும் மிக்கதாக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததாக இருக்குமோ என்ற எண்ணம் எனக்கு தோன்றுகிறது. காரணம், நான் அமர்ந்து பேசுகிறேன் உடல்நிலை கருதி. (அப்போது அருகே இருந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அப்படி இல்லை என்று மறுத்தார்) அப்படி இல்லை என்று கழகத்தின் தலைவர் மறுத்துவிட்டார். நீங்கள் இன்னமும் பல்வேறு நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ளலாம் என்று. (கூட்டத்தினர் கைதட்டல்)

நானும் பெரியார் வழியில் வந்தவன் கட்டுப்பாடுகளை மதிக்கிறவன் என்ற முறையில் நேரம் கடந்தாலும் எனது உரையை கூடி இருக்கின்ற மக்கள் தொகையை பார்க்கும்போது ஏன் சுருக்க வேண்டும் (பலத்த கைதட்டல்) என்ற எண்ணம் எழுகின்றது.

காவல்துறையை சார்ந்த அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய பெரிய வணக்கத்தையும், மரியாதையையும் தெரிவித்துக் கொண்டு சற்று கூடுதலாக பேசுவதற்கு நேர வாய்ப்பு தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை துவக்குகின்றேன்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் அச்சடிக்கிற நோட்டுகளில்கூட கடவுளை பரப்புகிற பித்தலாட்டங்களை செய்து வருவதை, இங்கே, பேசிய மரியாதைக்குரிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான தோழர் நல்லக்கண்ணு அவர்கள் குறிப்பிட்டார்கள். அது அமெரிக்கன் நாய் அவிழ்த்துவிடு இஷ்டப்பட்டதை பொறுக்கட்டும் (கைதட்டல்) என்று அந்தக் காலத்திலே கூறுவார்கள். அப்படித்தான் ஈராக்கிலே பொறுக்கி ஈரானிலே பாய்ந்து இந்தியாவிலும் ஒரு வழி படுத்துவதற்காக இந்த அணுசக்தி ஒப்பந்தத்தை கொண்டு வந்திருக்கிறது. இதற்கு கட்டுப்பட்டே தீரவேண்டும் என்று நாள் குறிக்கிறான். அதே நேரத்தில் அவன் நாட்டின் மக்கள் தொகை 30 கோடிக்கு உட்பட்டது. நாம் மக்கள் தொகையை 120 கோடியை நெருங்கிக் கொண்டிருப்பவர்கள்.

நாம் அதிகம் சாப்பிடுவதால்தான் உலகத்திலே விலைவாசி ஏறிவிட்டது என்று சாதாரண



அமெரிக்கன் அல்ல, ஜனாதிபதி சொல்லுகிறான் என்றால், நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உண்மையை இன்மையாகவும், இன்மையை உண்மையாகவும் நம்புகின்றவர்கள், சொல்லுகின்றவர்கள், பரப்புகின்றவர்கள், இங்கே நிறைய இருக்கின்றார்கள். இங்கே இராமாயணத்தை பரப்புவோரும் - அதே வகைக் கூட்டம் தான்.

இந்த இராமாயணத்தை பரப்புவதிலே இவர்கள் ஏன் ஆர்வத்தை காட்டுகிறார்கள். இவர்கள் ஏன் நம்மை அரக்கர்களாக கருதுகிறார்கள் அவர்களுடைய வேதங்களை, பொய்யுரைகளையும் நாம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏன் என்று கேட்கக் கூடாது. ஆராயக் கூடாது என்கிறார்கள்.

என்னை பன்முகம் கொண்டவன் என்று சொன்னார்கள். அதற்கு நான் பொருத்தமானவனோ, இல்லையோ அதை வரும் காலம் தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் தந்தை பெரியார் பன்முகத் தோற்றத்தோடு தான் ஒவ்வொரு துறையிலும் கை வைத்தார். ஒவ்வொரு நிலையிலும் தன் சாதனையை நிலைநாட்டிச் சென்றார்.

நம்முடைய அய்யா நல்லக்கண்ணு மிக அமைதியானவர். ஒரு காலத்திலே பொதுவுடமை கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் தந்தை பெரியாரை தங்களுடைய ஆசானாக மதித்து பாடுபட்டார்கள். பெரியார் சோவியத் நாட்டிற்குச் சென்று திரும்பிய பிறகு 'ரிவோல்ட்' என்ற ஆங்கில பத்திரிகையை தொடங்கினார்.

வெள்ளையனுடைய அரசு அந்த இதழ்களுக்கு தடைப்போட்டு பறிமுதல் செய்தது. அப்போது நாம் தொடர்ந்து தொண்டாற்றுவதா அல்லது இத்தோடு நிறுத்திக் கொள்வதா என்ற இக்கட்டான நேரத்தில் அவர் கொஞ்சம் வளைந்தார். ஆனால் எந்தக் கொள்கையும் விட்டுவிடவில்லை. அப்போது நீதிக் கட்சியை ஆதரித்தார். அப்போது பெரியாரை வசை கூறி சென்றவர்கள் நிறைய உண்டு. ஆனால் முடிவு என்ன ஆயிற்று.

1952 ஆம் ஆண்டு இதே வண்ணாரப் பேட்டையில் முதலாவது பொதுத் தேர்தல். மறைந்த ஜீவா அந்த தொகுதியிலே நிற்கிறார். பொதுவுடமை கட்சியின் மாபெரும் தலைவர். தந்தை பெரியார் தான் பிரச்சாரம் செய்கிறார். அப்போது ஜீவா கூறியது, "காரல் மார்க்சை நாங்கள் பார்த்ததில்லை. ஆனால் இதோ அமர்ந்திருக்கிறார் (பெரியார்) காரல் மார்க்ஸ். (கைதட்டல்) தந்தை பெரியார் தான் காரல் மார்க்ஸ்! என்றார். எந்த ஜீவா, பெரியாரை விமர்சித்து வெளியேறினாரோ, அதே ஜீவாதான் பிறகு இப்படிக் கூறினார்.

அதே நீதிக் கட்சியை சார்ந்த ராவ் பகதூர்கள், சர்கள், மிட்டாதாரர்கள், மிராசுதாரர்கள், குறுநில மன்னர்கள் அத்தனைப் பேரையும் கட்சியிலிருந்து வெளியேற்றியவர்தான் பெரியார். 1944 ஆம் ஆண்டிலே சேலத்திலே கூடிய நீதிக்கட்சி மாநாட்டிலே அறிஞர் அண்ணா ஒரு தீர்மானம் கொண்டு வந்து இனிமேல் வெள்ளையர்களின் பட்டயங்களை தாங்கிக் கொண்டு இருப்பவர்களுக்கு இந்த இயக்கத்திலே இடமில்லை என்று தீர்மானம் கொண்டு வந்தார். பெரியார் கூறி, அண்ணாவால் அந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதைத் தொடர்ந்து பலர் வெளியேறினார்கள்.

உத்தமர், வல்லவர் உலக வரலாற்றையே கரைத்துக் குடித்தவர் மிகப் பெரிய மேதை ஜவகர்லால் நேரு. 1947 ஆகஸ்டு 15 இந்த நாடு விடுதலை அடைவதாக சொல்லப்பட்ட நாள். இந்திய அரசாட்சி 1946லேயே நேரு தலைமையில் அமைந்தது. அதற்குரிய நிதி அமைச்சர் பின்னால் பாகிஸ்தான் முதல் நிதிஅமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட லியாகத் அலிகான். அவர் பாகிஸ்தான் பிரிந்து அங்கு போய்விடுகிறார். நிஜாம், கவர்னர் ஜெனரலாகவும், லியாகத் அலிகான் நிதி அமைச்சராகவும் அங்கே

4 ஆம் பக்கம்

தலையங்கம்

## தி.மு.க. மகளிர் மாநாட்டின் பாராட்டுக்குரிய தீர்மானங்கள்

ஜூன் 14, 15 தேதிகளில் கடலூரில் திராவிட முன்னேற்றக் கழகம் மகளிர் மாநாட்டை வெற்றியோடு நடத்தி, பல லட்சம் பெண்களைத் திரட்டி, சிறப்பான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. உண்மையில் பாராட்டி வரவேற்கத் தக்கதாகும். இந்த மாநாட்டைப் பற்றிய அரசியல் விமர்சனங்களைவிட, லட்சக்கணக்கில் பெண்கள், வீட்டுக்கு வெளியே வந்து குடும்பத்தைத் தாண்டி, சமூகத்திலும், தங்களுக்கு கவலை இருக்கிறது என்பதை உணர்த்தத் தொடங்கியிருப்பதையே முதன்மையாகக் கருதி பாராட்ட வேண்டும். இதுவே சரியான பெரியாரியல் பார்வையாக இருக்க முடியும்.

மாநாட்டில் உரையாற்றிய பேராசிரியர் அன்பழகன், கவிஞர் கனிமொழி போன்றோரின் கருத்தாழமிக்க, சுயமரியாதைக் கருத்துகளும் மாநாட்டின் சிறப்புகளாகும். கவிஞர் கனிமொழி தனது உரையில், கீதையின் தத்துவம் பெண்ணடிமையை வலியுறுத்தி, வர்ணாஸ்ரமத்தை உயர்த்திப் பிடிப்பதுதான் என்று பேசியுள்ளதை ‘தினமணி’ போன்ற பார்ப்பன நாளேடுகள் கண்டித்த நிலையில் – பகவத் கீதையின் சுலோகங்களையே ஆதாரமாக எடுத்துக் காட்டி, கனிமொழி மறுத்திருக்கிறார்.

“குடும்பத்தில் அறமின்மை தலையெடுக்கும் போது, குடும்பப் பெண்கள் களங்கப்படுகின்றனர். பெண் சீரழிந்து கெட்டுப் போவதால்தான், வர்ணாசிரம தர்மம் அழிந்து தேவையற்ற சந்ததிகள் பிறக்கின்றனர்” (“அதர்மாபிபவாத் கிருஷ்ண ப்ரதுஷ்யந்தி குலஸ்திரியா ஸ்திரி ஷி துஷ்டாஸூ வார்ஷ்ணேய ஜாயதே வர்ண ஸங்கர” – கீதை முதல் அத்தியாயம் – பாடல் 40) என்று ஆதாரத்துடன் எடுத்துக்காட்டி கனிமொழி மறுத்துள்ளார். முன்னாள் முதல்வரும், திராவிடர் கழகத் தலைவரால் ‘சமூகநீதி காத்த வீராங்கனை’ என்ற பட்டம் சூட்டப்பட்டவருமான பார்ப்பன ஜெயலலிதா, கீதையை சிலாகித்துப் போற்றுபவர் என்பதோடு, ஒரு முறை காவலர்களிடம் பேசிய போது, காவல்துறையினர் கீதையில் கிருஷ்ண பகவான் கூறியதுபோல், ‘பயனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்யக் கூடியவர்கள்’ என்று கீதையின் சுலோகத்தைக் கூறியே பாராட்டியவர்; திராவிடக் கட்சியின் பெயருக்குள் பார்ப்பனியம் நடத்தியுள்ள ஊடுருவலுக்கு, சாட்சியாக, ஜெயலலிதாவின் அந்த உரை இருந்தது. அப்போது, இதை எல்லாம் சுட்டிக்காட்டிக் கண்டிக்காமல், இப்போது தி.மு.க.வின் ‘புகழ் பாடும்’ தொழில் போலவே அன்றும் – ‘அ.தி.மு.க. புகழ் பரப்பும்’ பணியை திராவிடர் கழகத் தலைவர் வீரமணி செய்து கொண்டிருந்தார். ஆனால், தி.மு.க.வின் மீது பெரியார் கொள்கைப் பார்வையில் கூர்மையான விமர்சனங்களை வைத்து வரும் பெரியார் திராவிடர் கழகம் ஆதரித்து நிற்க வேண்டிய தருணங்களில் ஆதரிக்கத் தயங்காமல் கருத்துகளை முன் வைத்து வருகிறது.

அரசியல் மாநாடு – சமுதாய சீர்திருத்த மாநாடுகளில் ஏராளமான பெண்கள் பல்வேறு ஆழமான தலைப்புகளில் கருத்துகளை முன் வைத்திருப்பதும், மாநாட்டுத் தீர்மானங்கள் சரியான திசையில் சிறப்பாக அமைந்திருப்பதை யும் சுட்டிக்காட்ட வேண்டும். சேது சமுத்திரத் திட்டத்தைத் தடுக்கும் மதவாத சக்திகளுக்கு கண்டனம்; தனியார் துறையில் இடஒதுக்கீட்டுக்கு மத்திய அரசு சட்டம் கொண்டு வர வலியுறுத்தல்; மகளிருக்கான உரிமைகளை விளக்கும் பாடத் திட்டம்; பெண்களுக்கும் அர்ச்சகர் ஆகும் உரிமை; சுயமரியாதைத் திருமணத்தை இந்தியா முழுமைக்கும் சட்டமாக்குதல்; மத்திய அரசுப் பணிகளில் மகளிருக்கு 30 சதவீத இடஒதுக்கீடு; அரவாணிகள் நல வாரியத்துக்கு ஆதரவு – என்று முற்போக்குக்கான சமூகப் பார்வையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மகளிருக்கான 33 சதவீத இடஒதுக்கீடு தொடர்பாக மாநாடு நிறைவேற்றியிருக்கிற தீர்மானம் நடைமுறைக் கண்ணோட்டமுள்ள அணுகுமுறையாகும். பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டை முடக்கத் துடிக்கும் ஆணாதிக்க சக்திகள் அதை நேரடியாகக் கூறாமல், பிற்படுத்தப்பட்டோர் உள் இடஒதுக்கீட்டோடு வரவேண்டும் என்ற வாதத்தை முன் வைத்து பெண்களின் உரிமைகளை தொடர்ந்து மறுத்து வருகின்றனர். இத்தகைய உள் ஒதுக்கீடுகளோடு சட்டம் வரும்போது நீதிமன்றங்களே அதைக் குலைத்து விடும் என்பதே இவர்களின் நோக்கம். இதைப் புரிந்த காரணத்தினால்தான், ‘உள்ஒதுக்கீடு தேவைதான். அதை பிறகு முடிவெடுக்கலாம்; முதலில் பெண்களுக்கான சட்டம் வரட்டும்’ என்ற நிலையை பெரியார் திராவிடர் கழகம் எடுத்தது. (7.10.2006 சென்னை மாநாட்டில், அதை வலியுறுத்தி கழகம் தீர்மானம் நிறைவேற்றியது) இதே கண்ணோட்டத்தில், ‘முதலில் 33 சதவீத இடஒதுக்கீடு சட்டமாகட்டும், பிறகு உள்ஒதுக்கீடு பற்றி முடிவெடுக்கலாம்’ என்று தி.மு.க. மகளிர் மாநாடு இப்போது தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

ஆனால், சுதர்சன நாச்சியப்பன் தலைமையிலான நாடாளுமன்றக் குழுவிடம் கருத்து கூறியுள்ள திராவிடர் கழகத் தலைவர் வீரமணியோ பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டுடன் தான் மகளிர் உரிமைச் சட்டம் வரவேண்டும் என்று கருத்து தெரிவித்திருப்பதன் மூலம் மகளிர் இட ஒதுக்கீட்டையே முடக்கத் துடிக்கும் ஆணாதிக்க சக்திகளின் அணியில் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார்.

மண்டல் பரிந்துரையை அமுல்படுத்த முயற்சித்த வி.பி.சிங், அதை கல்விக்கு விரிவுபடுத்தாமல், ராணுவம், விஞ்ஞானம் போன்ற உயர் துறைகளுக்கு விலக்கு அளித்து தான் அமுல்படுத்தினார். அந்தக் கட்டத்தில் அதை ஆதரிப்பதே சரியானது என்ற முடிவுக்கே சமூக நீதி ஆதரவு அமைப்புகள் வந்தன. ஏன், திராவிடர் கழகம் கூட அதே நிலைதான் எடுத்தது. அத்தகைய அணுகுமுறையை இப்போது திராவிடர் கழகம் ஏன் கை கழுவுகிறது என்பதுதான் கேள்வி.

முதலில் ‘இடஒதுக்கீடு வரட்டும்’ என்று மண்டல் பரிந்துரையில் மேற்கொண்ட அணுகுமுறையிலிருந்து இப்பிரச்னையில் திராவிடர் கழகம் விலகி நிற்பது, பெண்ணுரிமைக் கண்ணோட்டத்தில் ஏற்கவியலாத ஒன்றாகும். திராவிடர் கழகத்தின் குழப்பம் தி.மு.கவுக்கு இல்லை என்பதை கடலூர் மாநாட்டுத் தீர்மானம் தெரிவித்திருக்கிறது. பாராட்டுகிறோம்!

# கா.சு.புதூரில் கழகம் ஆர்ப்பாட்டம்

நூறு விழுக்காடு சுற்றுப்புற சுகாதாரம் பாதுகாக்கப்பட்ட ஊராட்சிப் பகுதிகளுக்கு மத்திய அரசின் சார்பாக நிர்மல் கிராம் புரசுகார் என்ற விருதும், ரூ.5 லட்சம் பரிசுத் தொகையும் வழங்கப்படுகிற திட்டத்தின் கீழ் பொள்ளாச்சி வட்டத்தில் சுமார் 30 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.



ஊராட்சிப் பகுதியில் அனைவருக்கும் தனி நபர் கழிப்பிடங்கள் இருக்க வேண்டும். சாலையோர குப்பைமேடுகள், திறந்த வெளிக் கழிப்பிடங்கள் கூடவே கூடாது என்பன போன்ற பல விதிமுறைகள் இந்த விருது பெறுவதற்கான தகுதிகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. இதில் எதையுமே முழுமையாய் நிறைவேற்றாமல் வெறுமனே சாலை ஓரங்களை புல்டோசர் மூலம் ஒதுக்கிவிட்டு மத்திய ஆய்வுக் குழுவை உரியபடி கவனித்து பரிசுத் தொகையைப் பெறுவதிலேயே ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆவலாய் இருக்கிறார்கள். இதற்கு ஒன்றிய ஆணையாளர்களும், திட்ட அதிகாரிகளும் துணையாய் இருக்கிறார்கள்.

ஆத்துப் பொள்ளாச்சி ஊராட்சிப் பகுதிக்குட்பட்டது கா.சு.புதூர் கிராமம். இந்த கிராமமே திறந்த வெளிக் கழிப்பிடமாகவும், குப்பை மேடுகளாகவும் தான் காட்சியளிக்கும். இதை சரி செய்து சுற்றுப்புற சுகாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தி கா.க.புதூர் கழகத் தோழர்கள் பத்தாண்டுகளாகப் போராடி வருகிறார்கள். பத்தாண்டு காலமாய் கழகம் போராடிக் கேட்டும் சுகாதாரம் பாதுகாக்கப்படாமல் கிடக்கும் இந்த ஊராட்சியையும், “நிர்மல் கிராம் புரசுகார் விருது”க்கு தேர்வு செய்திருந்தார்கள் அதிகாரிகள். மக்கள் நலனில் அக்கறையில்லாதவர்கள் மக்களின் வரிப் பணத்தை பங்கு போடக் கனவு கண்டு கொண்டிருந்த வேளையில்,

சுற்றுப்புற சுகாதாரத்தைப் பாதுகாக்கத் தவறிய ஊராட்சி மன்ற நிர்வாகத்தைக் கண்டித்து நோய்த் தடுப்புக் கவசங்களை அணிந்து பேரணி - ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டது.

பேரணிக்கு காவல்துறை அனுமதி மறுத்ததை தொடர்ந்து 14.4.2008 ஞாயிறு காலை பேரணியைத் தவிர்த்துவிட்டு, பெண்கள், மாணவர்கள் என 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத் தலைமையில் ஆத்துப் பொள்ளாச்சி ஊராட்சி மன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்ய குவிந்தனர். ஆர்ப்பாட்டம் தொடங்கும் போது தி.மு.க. பிரமுகர்களும், தி.மு.க. ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் திடீரென அங்கு வந்து ஆர்ப்பாட்டம் நடத்தக் கூடாது என மிரட்டினார்கள்.

‘குறைகளைச் சுட்டிக்காட்டுவதும், சரி செய்யக் கோருவதும் எங்கள் உரிமை. அதை யாரும் தடுக்கக் கூடாது. தடுக்க முடியாது’ என்று தோழர்கள் எதிர்வாதம் செய்தனர். ஆனால் திட்டமிட்டு ரகளை செய்து ஆர்ப்பாட்டத்தை நடத்த விடாமல் தடுக்கும் நோக்கோடு, “கா.சு. புதூர் கிராமத்திலிருந்து வந்து யாரும் ஆத்துப் பொள்ளாச்சிக்குள் போராட்டம் நடத்தக் கூடாது” என்று கூறி தி.மு.க.வினர் வன்முறையில் ஈடுபட்டனர். (இதில் என்ன வேடிக்கையென்றால் கா.சு.புதூர் கிராமம் ஆத்துப் பொள்ளாச்சி ஊராட்சிக்குள் தான் இருக்கிறது) உடனடியாக தோழர்கள் அனைவரும் அப்படியே சாலையில் அமர்ந்து கொண்டு முழக்கமிட்டனர். பாதுகாப்புக்கு வந்த ஒரேயொரு காவலர் எவ்வளவு கேட்டும் தி.மு.க.வினர் கட்டுப்படவில்லை. நமது நகர கழக செயலாளர் வெள்ளிங்கிரி காவல்துறை உதவி ஆய்வாளரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். சற்று நேரத்தில் காவலர்களுடன் உதவி ஆய்வாளர் சம்பங்கி அங்கு வந்து தி.மு.க.வினரை கடுமையாக எச்சரிக்கை செய்து அங்கிருந்து அப்புறப்படுத்தினார். அதன் பிறகு ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பொள்ளாச்சி நகர செயலாளர் வே.வெள்ளிங்கிரி, ஆனைமலை ஒன்றிய செயலாளர் ருக்குமணி, ஒன்றிய தலைவர் ஆதி, மாணவர் கழக செயலாளர் கணேசு குமார், விவேக் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

## தொழில் பாகுபாடும் – சாதியும்

‘தொழில் பாகுபாட்டைக் கொண்டு சாதி வகுக்கப்பட்டதே ஒழிய – பிறவியைக் கொண்டு பிரிக்கப்படவில்லை. ஆதலால் தொழில் பிரிவு இருக்கத்தான் வேண்டும்’ என்று சொல்லி, ‘கீதையில் பகவான் சொல்லுகின்றார்’ என்று உங்களை ஏய்க்கக் கூடும். தொழிலுக்காக வந்தாலும் – ஏன் பாகுபாடு இருக்க வேண்டும்? ஒரு மனிதன் காலையில் தச்சனாகவும்,மத்தியானம் வியாபாரியாகவும், இரவில் உபாத்தியாயராகவும் ஏன் இருக்கக் கூடாது? அவனே மறுநாள் காலையில் உழுகின்றவனாகவும், பகலில் நெய்கின்றவனாகவும், மாலையில் விற்கின்றவனாகவும், இரவில் காவல்காரனாகவும் ஏன் இருக்கக் கூடாது?

இந்தப்படி ஒரு முறையும் நமக்கு வேண்டியதில்லை என்றும் சொல்வேன். அது மக்களுக்கு எந்த முறையிலும் எந்த அர்த்தத்திலும் பயன் விளைவிக்கவே இல்லை. இவையெல்லாம் உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை முதலிய கொடுமைத் தன்மைகளைத்தான் உண்டாக்கப் பயன்படுகின்றனவே ஒழிய மக்கள் சமத்துவத்திற்கும், சுதந்திரத்திற்கும் சிறிதும் பயன்படவில்லை.

**– பெரியார் ‘குடி அரசு’ 11.1.1931**

# ஆழமான விவாதங்கள்; கருத்துப் பகிர்வுகள்

## 160 புதிய இளைஞர்கள் பங்கேற்ற ஈரோடு மாவட்ட கழக பயிற்சி முகாம்




ஈரோடு மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் பெரியாரியல் பயிற்சி முகாம், கோபி அருகே உள்ள மகுடஞ்சாவடியில் சத்யபாமா திருமண மண்டபத்தில் ஜூன் 21,22 ஆம் தேதிகளில் சிறப்புடன் நடைபெற்றது. 160 புதிய இளைஞர்கள் முகாமில் பயிற்சி பெற்றனர். ஜூன் 21 ஆம் தேதி காலை 11 மணியளவில் தொடங்கிய முகாமில், மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் அறிமுக உரையாற்றினார். பகுத்தறிவாளர் கழகத்தைச் சார்ந்த பெரியார் கொள்கையாளரும், முகாமுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுமான தோழர்கள் க. மதியழகன், மே.பா. இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தொடக்க உரையில் புதுச்சேரி, மேட்டூரில் நடந்து முடிந்த முகாம்களைப் பற்றியும், பெரியார் காலத்தில் தமிழர் சமுதாயத்தின் எதிரிகளாக அடையாளம் காணப்பட்டவர்கள், இப்போது வேறு வடிவங்களில் வந்துள்ளதையும், எனவே - பெரியாரியலை மேலும் விரிவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, கழகம் இந்த முகாம்களை நடத்தி வருகிறது என்று குறிப்பிட்டார். உலகமயமாக்கல் என்று உலகையே உலுக்கி வரும் பொருளாதார அரசியல் கொள்கைகள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்கு எதிராக உள்ளன. பன்னாட்டு நிறுவனங்கள் - வல்லரசு நாடுகளின், இந்த சுரண்டல் கொள்கையில் பார்ப்பனர்கள், கைகோர்த்து நிற்கின்றன. எனவே, உலகமயமாக்கல் மற்றும் சுற்றுச் சூழல் பிரச்சினைகளை, பெரியாரியல் பார்வையில் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை சுட்டிக் காட்டினார். தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் வெற்றிச் செல்வன், உலகமயமாக்கல் எனும் தலைப்பில் ஏராளமான தகவல்களுடன் பயிற்சியளித்தார்.

சுகாதாரம், சுற்றுச் சூழல், உணவுத் துறைகளில் உலகமயமாக்கலால் நிகழ்ந்துள்ள கடுமையான பாதிப்புகளையும் 1947 ஆம் ஆண்டிலேயே ‘காட்’ ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டு, பிறகு 10 ஆண்டுகாலம் உருகுவே நாட்டில் நடந்த பல்வேறு சுற்றுப் பேச்சு வார்த்தைகளிலும் பங்கேற்று, இறுதியில் உருவாகப் போகிற ஒப்பந்தம் எது என்பதை அறியாமலே, 60,000 பக்க வெற்றுக் காகிதத்தில் இந்தியப் பார்ப்பன அதிகாரிகள் கையெழுத்திட்டு ஒப்புதல் வழங்கியதையும் எடுத்துக் கூறினார்.

1987-லிருந்து 1994 வரை வல்லரசு நாடுகள் கூடிப் பேசி 1995 இல் உருவானது தான் உலக வர்த்தக நிறுவனம். 1990 இல் சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்த நிலையில், அமெரிக்கா தன்னை உலக ‘எஜமானனாக்க’ திட்டமிட்டு காய்களை வேகமாக நகர்த்தத் தொடங்கியது. உலகமயமாக்களின் அடிப்படையான அம்சம், நுகர்வு கலாச்சாரத்தை விரிவுபடுத்தி, அதில் தேர்வு செய்யும் உரிமையையும், நுகர்வோரிடமிந்து பறித்து, தனது உற்பத்தியை நுகர்வோர் மீது திணித்தது தான். உலக வர்த்தக நிறுவனத்தின் நிபந்தனைகளை முழுமையாக ஏற்றால்தான், அதில் உறுப்பினராக முடியும். ஏற்காத நாடுகள் வெளியேறலாம் என்று மிரட்டப்பட்டன. ஆனால், உலக வர்த்தக நிறுவனத்தில் எத்தகைய ஒப்பந்தங்கள் இருக்கின்றன என்பதற்குக்கூட கணக்கு கிடையாது. அவ்வளவு ஒப்பந்தங்கள் இருக்கின்றன. இந்த உலகமயமாக்கலின் கீழ் - சுதந்திர குடிமக்கள் என்று எவரும் இல்லை. அனைவருமே கட்டுப்படுத்தப்பட்டவர்கள். 25 கோடி பேர் இந்தியாவில் ஒரு வேளை உணவும் கிடைக்காதவர்கள் என்றும், உலகிலேயே குழந்தைகள் இறப்பு விகிதம் இந்தியாவில் தான் அதிகம் என்றும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஆனால், மருத்துவத் துறை தனியார் மயமாக்கப்பட்டு, மருத்துவம், சுற்றுலாத்துறையாக்கப்பட்டு, இந்தியா பின்பற்றிவந்த காப்புரிமை நெறிமுறைகள் சட்டத்தைத் திருத்தி, பன்னாட்டு நிறுவனங்களின் மருந்துகள் அதிக விலையில் விற்பனைசெய்ய வழிவகுக்கப்பட்டுவிட்டது என்று விளக்கினார் வெற்றிச் செல்வன். தோழர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு விரிவான விளக்கமளித்தார்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு, கழக அமைப்பாளர் சதுமுகை பழனிச்சாமி இயக்கப் பாடல்களைப் பாடி நிகழ்ச்சியைத் தொடங்கினார். பங்கேற்பாளர்கள் தங்களைப் பற்றிய விரிவான அறிமுகத்தை வழங்கினர். கடவுள் நம்பிக்கையாளர்களாக திகழ்ந்து, பிறகு நண்பர்கள் அறிமுகத்தால், பெரியார் கருத்துகளைக் கேட்டும், பிறகு பெரியார் நூல்களைப் படித்தும், பெரியார் இயக்கக் கொள்கை நோக்கி வந்ததாகப் பலரும் தெரிவித்தனர். சாதி, தீண்டாமை ஒடுக்கு முறைகளால் பாதிக்கப்பட்டு, இதைத் தடுக்க முடியாத கடவுளும் மதமும் தேவைதானா என்ற கேள்வி, தங்களை பெரியாரியல் நோக்கி திருப்பியது என்றும் சில தோழர்கள் தெரிவித்தனர். முதலில் ஆர்.எஸ்.எஸ்.காரர்களால் ஈர்க்கப்பட்டு, அந்த முகாமில் சில காலம் இருந்து, பிறகு, அவர்களின் சாதிய, பார்ப்பனிய போக்குகளை உணர்ந்து, பெரியாரியல் நோக்கி திரும்பியதாகவும், சில தோழர்கள் தெரிவித்தனர்.

தோழர்கள் அறிமுகத்தில் முன் வைத்த கருத்துகளின் அடிப்படையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையைத் தொடங்கினார். பெரியார் திராவிடர் கழகத்தை மேலும் மக்களிடையே கொண்டு செல்வதற்கான செயல் உத்திகளை விளக்கி, நண்பர்களை தோழர்களாக்கி, தோழர்களை இயக்கத்துக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளில் பின்பற்ற வேண்டிய அணுகுமுறைகள் பற்றியும் விரிவாகப் பேசினார். சாதி-தீண்டாமை ஒழிப்பை முன்னிறுத்தி, அதற்காக கடவுள் மறுப்பு, மத எதிர்ப்பு, பார்ப்பன ஆதிக்க, எதிர்ப்பு - உலக மய எதிர்ப்பு, தனியார் துறை இடஒக்கீடு, பெண்ணுரிமை என்ற விரிவான தளைங்களில் மக்கள் இயக்கம் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை விரிவாக எடுத்துரைத்து பேசினார். தமிழ்த் தேசியம், மார்க்சிய-லெனினியம் - தலித் அமைப்புகள் போன்ற இயக்கங்களோடு, பெரியாரியம் விலகி நிற்கும் புள்ளிகளையும், இணைந்து நிற்கும் புள்ளியையும் சுட்டிக்காட்டி, இரண்டரை மணி நேரம் தோழர்களுடன் விவாதித்தார். ஒவ்வொரு பெரியார் திராவிடர் கழக தோழரும் ஆண்டுக்கு குறைந்தது ஒருவரையாவது புதிதாக கழகத்துக்கு கொண்டுவரவேண்டும் என்று வலியுறுத்தினார். இரவு 7.30 மணியளவில் முதல் நாள் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சி காலை 11 மணிக்கு தொடங்கியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சமூக நீதி, பெண்ணுரிமை, நவீன மூட நம்பிக்கைகள், சிறு தெய்வ வழிபாடு, முருகன் தமிழ்க் கடவுளா? போன்ற பல்வேறு பிரச்னைகள் பற்றி விளக்கி உரையாற்றி, தோழர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கமளித்துப் பேசினார்.

மதிய உணவுக்குப் பிறகு, மக்கள் உரிமைக் கழக செயலாளர் வழக்கறிஞர் பாலமுருகன், மனித உரிமைகள், வன்கொடுமைச் சட்டங்கள் மனித உரிமைச் சட்டங்கள் பற்றி பெரியாரியல் பார்வையில் ஏராளமான தகவல்களுடன் விரிவாக பயிற்சியளித்தார். இரவு 8 மணியளவில் பயிற்சி முகாம் நிறைவடைந்தது. இருநாள் பயிற்சியும் தங்களுக்கு நல்ல பயனுள்ளதாக அமைந்தது என்று, பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர்.

இது, புதுவை, மேட்டூரைத் தொடர்ந்து கழகம் நடத்திய மூன்றாவது பயிற்சி முகாம் ஆகும். அடுத்து, நாகை மாவட்டம் பூம்புகாரிலும், கோவையிலும் கழகத்தின் பயிற்சி முகாம்கள் நடைபெறவுள்ளன.

## கழக செயற்குழுவில் இரங்கல்

15.6.2008 அன்று காலை 10.30 மணியளவில் சென்னை கோடம்பாக்கம் கணேசு மகாலில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்ற பெரியார் திராவிடர் கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்டவர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தளபதி பிரிகேடியர் பால்ராஜ்,
கொளத்தூர் ஆசிரியர் தி.இரா.கிருட்டிணன்,
கழக புதுவை மாநிலத் தலைவர் லோகு அய்யப்பன் தாயார் சரசுவதி அம்மாள்,
கழகப் பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் சகோதரர் கு. இலட்சுமணன்,
செயற்குழு உறுப்பினர் கோவை வெ. ஆறுச்சாமி அக்காள் கண்ணம்மாள் ,
தி.மு.க. வெளியீட்டுச் செயலாளர் திருச்சி செல்வேந்திரன் துணைவியார் பாக்கியமணி,
கோவை மாநகர தலைவர் ராசுக்குமார் தந்தை மருதாசலம்,
செயற்குழு உறுப்பினர் பெரியகுளம் குமரேசன் தாயார் சின்னம்மாள்,
கழகத் தோழர் சென்னை இராயப்பேட்டை பரமேசுவரன்,
பொள்ளாச்சி புகைப்பட வல்லுநர் வெங்கடேசு,
மேட்டூர் தோழர் செல்வம், ஈரோடு தோழர் சி. ஈசுவரன், சென்னிமலை ராமசாமி தாயார் சிவகாசி,
கோபி கழகத் தோழர் பொலவக்காளி பாளையம் பொன்னுசாமி தாயார் தங்கம்மாள்
ஆகியோர் மறைவுக்கு கழக செயற்குழுவில் இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# இராவணனைக் கொல்வதற்கே ராமாவதாரம்

முதல் பக்கத் தொடர்ச்சி

பொறுப்பேற்கிறார்கள். இங்கே (இந்தியாவில்) யார் நிதி அமைச்சராக இருப்பது? எந்த நீதிக்கட்சியை பெரியார் ஆதரிப்பதாக குற்றம் சாட்டினார்களோ, அதே நீதிக்கட்சியின் ஆர்.கே.சண்முகச் (செட்டி)யார் தான் நேருடைய அமைச்சரவையில் நிதி அமைச்சர்.

ஆகவே யார் என்ன என்று பார்க்காது - அவருடைய செயல் என்ன, அறிவு ஆற்றல் என்ன, இன்னார் இந்தத் தகுதிக்கு உரியவரா என்பதை ஆய்வதிலே தந்தை பெரியாருக்கு நிகரில் யாருமில்லை. ஆகவேதான் அவர் 1927, 1928-லேயே மற்ற வேலைகளை ஒதுக்கிவிட்டு இராமாயணத்தை சந்திர சேகர பாவலர் அவர்களைக் கொண்டு, காண்டம் காண்டமாக இராமாயணத்தை ஆய்வு செய்து 'குடி அரசிலே' பெரியார் வெளியிட்டார். சந்திரசேக பாவலர் என்ற புனைப் பெயரிலே 'இராமாயணத்தை' ஆய்வு செய்து எழுதியவர், நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த இ.மு.சுப்பிரமணிய பிள்ளை. இராமாயணத்தை 'குடி அரசு' அம்பலப்படுத்தும் போது, அது வைணவ புராணம் என்பதால் சைவப் பார்ப்பனர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். இந்த ஆய்வுக் கருத்துக்களை எல்லாம், மக்கள் மன்றத்திற்குக் கொண்டு வந்தவர் பேரறிஞர் அண்ணா. 1942 ஆம் ஆண்டிலேயே அறிஞர் அண்ணா தன்னுடைய வீட்டிலே திராவிடர் கழகம் என்ற பெயர்ப் பலகையை மாட்டிவிட்டுக் கொண்டவர். வாய்ப்பு வந்த உடனே 1944-லே சேலத்திலே நீதிக்கட்சியை திராவிடர் கழகமாக மாற்றியவர் அண்ணா. அதன் பிறகு 1945-லே திருச்சியிலே கூடிய மாநாட்டிலே அவரே தீர்மானம் கொண்டு வந்து, அவரே தளகர்த்தராக இருக்க ஒப்புக் கொண்டு இந்த கருஞ் சட்டை இயக்கத்தை அண்ணா தொடங்கினார்.

அன்று அணிந்த கருஞ்சட்டையைத் தான் இனமானம் காக்க, இன்றும் நாம் அணிகிறோம். அதே அண்ணா தான் 'நீதி தேவன் மயக்கம்', நாடகத்தை எழுதி, நடித்து, இராமாயணத்தில் இருக்கின்ற உண்மையை சொன்னதால் நீதி தேவனே மயங்கிப் போவதுபோல் எழுதினார்.

அதேபோல்தான் இப்போது நம்முடைய உச்சநீதிமன்ற நீதிபதிகள் மயங்கி இருக்கிறார்கள் (கைதட்டல்). நம்முடைய சேது கால்வாய் திட்டத்திற்கு இணங்கி நம்முடைய கலைஞர் ஒரு படி கீழ் இறங்கிவந்து, அது இராமன் சேது என்றாவது பெயர் வைத்துக் கொள்ளுங்கள். அதனால் மக்களுக்கு பலன் வேண்டும். இந்த நாடு செழிக்கட்டும். இந்த நாட்டின் பொருளாதாரம் சிறக்கட்டும் என்று கூறுகிறார். எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும், கலைஞர் இவ்வளவு தூரம் இறங்க வேண்டாம் என்பது எங்களுடைய கருத்து. அவர் இறங்கி அவ்வளவு பணிவோடு வேண்டுகோள் விடுத்தும், அதை இன்னும் ஒப்பாதவர்கள் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இராவணன் எங்கே இருந்தான், அனுமான் எங்கே போனான், இலங்கா புரிக்கு போனான். அது என்ன இலங்காரிபுரி என்பது ஒரு ஊரா? சீதையை எங்கே சிறை வைத்தான். யாரையாவது சொல்லச் சொல். ஒரு பாப்பான், ஒத்த பார்ப்பான், சவுண்டி (கைதட்டல்) யாராவது ஒரு ஆள், பதில் சொல்லத் தயாரா? இதையேதான் 60 ஆண்டுகளாக கேட்டு வருகிறேன். சீதையை ராவணன் மட்டகளப்பில் வைத்தானா, திரிகோணமலையில் வைச்சானா, கொழும்பில் வைச்சானா, யாழ்ப்பாணத்தில் வைச்சானா எங்கே வைத்தான்? இலங்கை என்பது ஊரா பதில் சொல். ஒரு அறிவும் இல்லாத பக்தன் நம்மைப் பார்த்து வாதத்துக்கு வா என்கிறான்.

நான் இராமாயணத்தை 'காலட்சேபமாக' 3 நாள், 5 நாள், 7 நாள் என்று, பார்ப்பனர்கள் நிறைந்த பகுதியிலே நடத்தி, இதே கேள்விகளை கேட்டேன். தஞ்சை மாவட்டத்தில் பார்ப்பனர் செல்வாக்குள்ள நன்னிலம் வட்டத்தில், இதே போல் காலட்சேபம் நடத்தி கேட்டேன். பார்ப்பனர்கள் சூழ்ந்து நின்று கேட்டார்களே தவிர பதில் இல்லை.

இராவணனை ஏன் பார்ப்பான் ஒழிக்கணும் என்கிறான். இவர்கள் ஏர் கலப்பையை வைத்து உழுதாலே பூமா தேவியின் வயிற்றைக் கிழிக்கும் என்கிறார்கள். அப்படித்தான் அவனுடைய வேதம், சாஸ்திரம், தர்மம் சொல்லுது. நாம் ஏர்க் கருவிகளை கொண்டு மாடுகளை பூட்டி விவசாயம் செய்து கொண்டிருந்த கூட்டம். பார்ப்பான் ஒன்றுமே செய்யாமல், ஆடு மாடுகளை திருடிக் கொண்டு போய் நெருப்பிலே போட்டு கொளுத்தி சோமபானம், சுராபானம், மைத்திரேயம், மைத்கல்யம் இவை எல்லாம் அவர்கள் குடிக்கும் சாராயத்தின் பெயர். (கைதட்டல்) குடித்துக் கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் தடுத்ததுதான் இராவணன் செய்த குற்றம்.

இன்னும் நம்புறான் பத்துத் தலை இராவணன் என்று. புலவர் குழந்தை இதை விளக்குகிறார்; அது 10 தலையல்ல, அய்யிரண்டு பத்து திசையிலும் தன் அதிகாரத்தை நிலை நாட்டியவர் என்று. அதனால் தான் இராவணன். இப்போது இருக்கிறதே பீர், விஸ்கி, பிராந்தி என்று அதுபோல அப்போ இருந்ததை தடை செய்தான். ஆடு, மாடுகளை திருடியவர்களை தடை செய்தான். திருட்டுப் பயல்களை விட முடியுமா? கோயிலுக்குள்ளேயே சாமிக்கு போட்டிருக்கிற நகையை திருடிக்கிட்டுப் போயிடுறான். அப்புறம் என்ன, சாமி வெங்காயம் வாழுது அங்கே. (கைதட்டல்)

தேவர்கள் என்பவர்களே, ஆடு மாடுகளை திருடியவர்கள்தான். சாராயம், மைத்ரேயம், மைத்கல்யம் குடிப்பவர்கள்தான். இராமன் அவதாரம் எடுப்பதே இராவணனைக் கொல்வதற்குத் தான் என்று இராமாயணமே கூறுகிறது.

இராவணனை திட்டமிட்டே இராமன் கொல்கிறான். இந்திய கிரிமினல் தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் பட்டியலிலே வருகிறவன் ராமன். உங்களுக்கு எத்தனை ஆதாரம் வேணும். சீதையே கேக்குறா, ஒரு பாவமும் அறியாத இவர்களை ஏன் கொல்கிறாய் இராமா என்று.

அயோத்திக்கு வடக்கே தான் இமயமலை அடிவாரம் அங்கே தான் காடுகள் எல்லாம் இருக்கிறது. இவன் அங்கே தானே போக வேண்டும். எதற்காக தெற்கே வரான். ஆகவே இராவணனையும் அவர்களை சார்ந்தவர்களையும் அழிக்க வேண்டும் என்பதற்காகத்தான்!

பேரறிஞர் அண்ணா அப்பொழுது பெரிய அறிஞர்கள் என்பாரையெல்லாம் வாதத்திற்கு அழைத்தார். அண்ணாவின் வாதத்திற்கு பதில் சொல்ல முடியாத சொல்லின் செல்வன் இரா.பி.சேதுப்பிள்ளை, நேரம் கடந்து விட்டது. நான் தயார் செய்துக் கொண்டு மீண்டும் வாதத்திற்கு வருகிறேன் என்று சென்றவர் தான்; திரும்ப வரவில்லை.

நாவலர் சோமசுந்தர பாரதியோடு சேலத்தில் அண்ணா எடுத்து வைத்த வாதத்திற்கு பதில் சொல்ல முடியாமல் இரயிலுக்கு நேரமாகிவிட்டது என்று சென்று விட்டார். பதில் சொல்ல யோக்கியதை இல்லை, திராணிஇல்லை. அவரும் ஓடி ஒளிந்தார். பிறகு தான் அண்ணா, "நீதி தேவன் மயக்கம்" என்ற நூலை எழுதுகிறார். பிறகு கம்பரசத்தில் பிழிந்தெடுத்தார். இவைகளையெல்லாம் படித்த பிறகு தான் நான் எழுதினேன் இராமாயண நாடகம் என்று. அந்த நாடகத்தில் நடிகவேள் எம்.ஆர்.ராதா, இராமன் வேடம் அணிந்து நடித்தது தான் அந்த நாடகத்தின் சிறப்புகளிலே ஒன்று. அவ்வளவு சிறப்பாக நடித்துக் காட்டி நாடாளுமன்றத்திலேயே கேள்விக் கேட்கக் கூடிய நிலை ஏற்பட்டது நேரு அவர்கள் பதில் சொல்லும்போது, உங்களுடைய இராமராஜியத்தில் சம்பூகன் என்ற ஒரு காட்டு வாசி. தீண்டத்தகாதவன் சகல வேதங்களையும் கற்று தேர்ந்த பிறகு காட்டிலே தவம் செய்கிறான். உடனே இந்த ஆரியப் பார்ப்பனர்கள் தங்களுடைய 5 வயது குழந்தை இறந்துவிட்டது என்று இராமன் முன்னால் கொண்டு சென்று இராமா உன்னுடைய இராம ராஜ்ஜியத்திலே எங்கோ நீதி கெட்டுவிட்டது என கூற, நீதி தவறாமல், மனு தர்ம சாஸ்திரப்படி தானே நான் ஆட்சி செய்கிறேன் என்றான். ராமன். அதற்கு பார்ப்பனர்கள் குழந்தை இறந்து விட்டதே எனக் கூற அதற்கு ஆயுள் முடிந்திருக்கும் என்கிறான் இராமன். பார்ப்பனர்களோ இல்லை அவையெல்லாம் சூத்திரர்கள் வீட்டிலே. எங்கள் ஆத்திலே பிறக்கிற குழந்தைகள், பால்யம், பிரபஞ்சரியம்... என படிப்படியாக 5 கட்டங்களை தாண்டி சந்நியாசம் வாங்கி தான் சாவோம் என்கின்றான். உடனே இராமன் சம்பூகன் தவத்தால் தான் பார்ப்பனர் குழந்தை இறந்தது என அறிந்து அவனை அம்பு வீசி கொல்கிறான். அடுத்ததாக துரோணாச்சாரி தாழ்த்தப்பட்ட ஏகலைவனின் கட்டை விரலை வெட்டுகிறான். இவ்வளவு கதைகளை நீங்கள் வைத்துக் கொண்டு இருக்கிற வரை அவர்கள் இது போன்ற நாடகங்களை நடத்தத்தான் செய்வார்கள் அதைத் தடுக்க முடியாது என்றார் நேரு அவர்கள்.

அகில இந்திய வானொலியிலே, 'இன்று ஒரு தகவல்' கூறும் தென்கச்சி சாமிநாதன் கூட, அதில் ஒன்றைக் கூறினார். ராமனுக்கும் சீதைக்கும் திருமணம், மிதிலையில் முடிந்தவுடன், ராமன் எழுந்து, நேரே யாருக்கு மரியாதை செலுத்த வருகிறான்? 'தசரதன், ஜனகன், கோசலை, சுமத்திரை, இவர்கள் யாருக்கும் முதல் மரியாதை செலுத்தவில்லை. நேரே, கைகேயிடம் போய் கும்பிட்டு வணங்குகிறான். எங்கள் திருமணம் முடிந்துவிட்டது. இனி நான் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று, கைகேயிடம் தான் கேட்கிறான்!

உண்மையிலே ராமன் யோக்கியனாக இருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்? தனது குடும்பத்திலே தனக்கு திருமணம் நடக்கும்போது, அதற்கு தம்பி பரதனை அழைத்திருக்க வேண்டுமா, இல்லையா? பரதனையும், சத்ருகனையும், அவர்களின் தாத்தா வீட்டுக்கு அனுப்பிவிட்டு, திரு மணத்தை செய்து கொள்கிறான். தசரதன், பரதனுக்கு முடிசூட்டுவதாக, கைகேயிக்கு வாக்கு கொடுக்கிறான், அதற்குப் பிறகுதான் கைகேயியை மணம் முடிக்கிறான். கைகேயிக்குப் பிறந்த பிள்ளைகளுக்கே மகுடம் சூட்டுவேன் என்று கைகேயிக்கு தந்த வாக்குறுதிக்கு எதிராக ராமன், கைகேயி யின் பிள்ளைகள் இல்லாத நேரத்தில், வஞ்சகமாக மகுடம் சூட்டிக் கொள்ள முடிவு செய்கிறாள். இதுதான் உயர்ந்த பண்பாடா? இவன்தான் வணங்கத்தக்க அவதாரமா? ராமர் பக்தர்கள் பதில் சொல்லட்டும்!

இந்தக் கருத்துகளை எல்லாம் மீண்டும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். இந்தப் பிரச்சாரங்கள், கருத்துகள் தீவிரமாகப் பரப்பப்படாத காரணத்தால்தான் இன்றைக்கு பார்ப்பனர்கள் 'ராமன்' பெயரைக் கூறி, ஒரு பெரிய திட்டத்தையே முடக்கி விடத் துணிந்து விட்டார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களில் ஒருவரான அய்யா நல்லக்கண்ணு அவர்களுக்கு, நான் இந்த நேரத்திலே வைக்கும் வேண்டுகோள், இங்கே நீங்கள் பேசியதுபோல் மூடநம்பிக்கை எதிர்ப்புக் கருத்துகளை தொடர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டும். இராமாயண எதிர்ப்புக் கருத்துகளை, பொதுவுடைமை கட்சியினரும், மக்களிடையே பரப்ப வேண்டும். இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதித்த காவல் துறையினருக்கும், பெரும் திரளில், இங்கே, இது வரை அமர்ந்திருந்து எனது கருத்துகளை செவிமெடுத்த மக்களுக்கும், எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். - இவ்வாறு திருவாரூர் கே. தங்கராசு அவர்கள் தன்னுரையில் குறிப்பிட்டார்.

## மறைவு



சத்தி வட்டம், மாக்கினாங்கோம்பை, அரசூர் பகுதியைச் சார்ந்த கழகத் தோழர் ப. ஆறுமுகம், செங்கல் சூளை மீது ஏறும் போது கால் தவறி விழுந்து அடிபட்டார். உடனடியாக மருத்துவ சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் **31.5.2008** அன்று சனிக் கிழமை மரணமடைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். மிகவும் அடக்கமான, அமைதியான ஆனால் உறுதியான நிலைபாட்டுடன் திகழ்ந்த தோழர் ஆவார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 26th June 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.